விலை: 60.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 118 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 03 ஞாயிற்றுக்கிழமை (16.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# ‘தமிழர் மரபுரிமையை பாதுகாப்போம்’
## நல்லூரில் இன்று உண்ணா நோன்பு

(யாழ்ப்பாணம்)
தமிழர் மரபுரிமையைப் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் நல்லை ஆதீன முன்றலில் இன்று அடையாள உண்ணா நோன்புப் போராட்டம் இடம்பெற வுள்ளது.


ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் மக்கள் சார்ந்த தேசிய சக்திகள், சமய சமூக தன்னார்வ அமைப்புக்கள் என பல தரப்புக்கள் இணைந்து முன்னெடுக்கும் மாபெரும் போராட்டத்தின் பிரதான கோரிக்கைகள்,

1.அழிக்கப்பட்ட வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டும். நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

2.குருந்தூர் மலை, கன்னியா வெந்நீரூற்று ஆதி சிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப்படுவதுடன் புதிய பௌத்த கட்டுமானம்மற்றும்பௌத்த தொல்லியல் புதிய வர்த்தமானி இரத்து நடைமுறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

3.இன மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தமிழர் 23

# யாழில் மீண்டும் கொரோனா அபாயம்
## யாழ்.போதனாவில் நேற்றும் மூவருக்கு தொற்று உறுதி



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மூவர் கோவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் யமுனானந்தா தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தாய், கர்ப்பவதி மீது வாள்வெட்டுத் தாக்குதல்
### நகை, பணம் அபகரிப்பு

(வவுனியா)
வவுனியா, பம்பைமடு பகுதியில் வீதியில் சென்ற தாய் மற்றும் கர்ப்பவதியான மகள் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் அணிந்திருந்த நகைகள் மற்றும் பணம் என்பனவும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பூவரசங்குளம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா, பூவரசங்குளம் பகுதி 23

### பண்ணையில் அம்மன் சிலை
## உருத்திர சேனைத் தலைவரிடம் பொலிஸார் விசாரணை

(யாழ்ப்பாணம்)
உருத்திரசேனைத் தலைவர் நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பொலிஸாரால் மூன்றரை மணிநேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் நாகபூசணி அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டதன் அடிப்படையில் இவ்விசாரணை இடம்பெற்றுள்ளது.

இதேவேளை பண்ணை சுற்றுவட் 23

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம் எழுதும்
தமிழ்ப் புத்தாண்டு பலன்கள்
உள்ளே

## ஜனநாயக சீர்திருத்தங்களுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும்
### இலங்கை தொடர்பில் அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் ஜனநாயக சீர்திருத்தங்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத்தின் உதவிச் செயலாளர் டொனால்ட் லூ மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களுக்கான பணியகத்தின் உதவிச் செயலாளர் 23

## புத்தாண்டு விபத்து
### 200 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)
நாடு முழுவதும் புத்தாண்டு தினத்தில் இடம்பெற்ற விபத்தில் 200 23

### இலங்கையிலிருந்து சீனாவுக்கு அனுப்பப்படவுள்ள
## குரங்குகள் தொடர்பில் ஆராய அமைச்சரவை குழு நியமனம்

(கொழும்பு)
இலங்கையில் உள்ள குரங்குகளை, சீனாவில் உள்ள விலங்குகியல் பூங்காக்களுக்கு வழங்குவது தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை, அமைச்சரவையில் முன்வைக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக, அமைச்சரவையினால் குழுவொன்று நியமிக்கப்படும் என்றும் அந்த அமைச்சு கூறியுள்ளது.

இலங்கையின் குரங்குகளை சீனா 23

## குறிகாட்டுவானில் அரச மரம்
### பொதுமக்கள் அதிருப்தி



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் இறங்குதுறையில் அரச மரம் ஒன்று வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பொதுமக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு செல்லும் கடல்வழி மார்க்கத்தின் தொடக்க பிரதேசமான குறிகாட்டுவானில் அரசமரம் ஒன்றும், நயினாதீவு விகாராதிபதியின் விளம்பரப் பலகையும் காணப் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
04
-
07
-
1945



விண்ணில்
07
-
05
-
2021

## அமரர் நன்னித்தம்பி மகேந்திரன்

ஆயிரம் உறவு நொடி அளவில் தேடிவந்தாலும் தந்தை எனும் உறவு போல் யாருமில்லை என்று சொல்வதற்கு ஈடு ஆகாது நட்சத்திரங்களாய் ஜொலிக்கும் ஆன்மாவாய் இருக்கும் உள்ளங்களின் பாச ஒளி புயலால் அடித்துச் சென்றமையால் அதை தேடிச் செல்ல ஆசை தேடிச் சென்றாலும் கிடைக்காது என்பதால் அதை நினைவுகளால் அலங்கரித்து நினைவு கூற எங்கள் தந்தையின் இனிய மலர் வாடிய திருநாளை அனுட்டிக்கும் நிகழ்விற்கு உற்றார், உறவினர்களையும் அயலாளர் எங்கள் வாச அரசனின் அன்பை பகிர வரவேற்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்

(15273)

# சொர்க்கம் திருமண சேவை

- கனடா 37 வயது விசாக நட்சத்திர மணமகனுக்கு அழகான மணமகளும்
- கனடா 35 வயது பூராடம் சாரதி மணமகனுக்கு மணமகளும்
- சுவிசில் வசிக்கும் 30 வயது மணமகனுக்கு படித்த அழகான மணமகளும் தேவை.

(15266)

கனடா - 0014166661855
யாழ்ப்பாணம் - 077 200 0230, 077 887 6969

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

# நாகபூஷணி திருமண சேவை

## மணமகள் தேவை

01. 1994,புனர் பூசம்,செவ் - - டொக்டருக்கும்
02. 1993,பரணி ,செவ் - - டொக்டருக்கும்
03. 1994,பரணி, செவ் - - எஞ்சினியருக்கும்
04. 1995,அத்தம், செவ் - 7 வங்கியியலாளருக்கும்
05. 1992,அத்தம், செவ் - 7 எஞ்சினியருக்கும்
06. 1980,திருவாதிரை, செவ் - - Canada மணமகனுக்கும்
07. 1996,ரேவதி, செவ் -4 எஞ்சினியருக்கும்
08. 1988,ரேவதி, செவ்-7 சிங்கப்பூர் எஞ்சினியருக்கும்
09. 1987,மூலம், செவ்-1 UK மணமகனுக்கும்
10. 1996,ரோகினி, செவ்-2 சூரிய/செவ், UK எஞ்சினியருக்கும்

மணமகள்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

(C-6365)

பல்லாயிரக்கணக்கான மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. மிகப்பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்துதரப்படும்.

இல.264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596, 071 999 9306

# மரண அறிவித்தல்

## கந்தையா சீவரத்தினம்



தோற்றம் 04.02.1954 மறைவு 14.04.2023

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கு அடுவம் பற்றை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சீவரத்தினம் அவர்கள் 14.04.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் புதல்வனும் தையல் பிள்ளையின் அன்புக் கணவரும் சிறீதரன் (பிரான்ஸ்), சிறீவாணி (பிரான்ஸ்), சிறீவதனா, சிறீப்பிரியா, சிறீகௌதமி ஆகியோரின் அன்புத் தந்தையும் மருமக்களான கிரியா, காண்டீபன் (பிரான்ஸ்), அருள்தாசன், சயந்தன், சுதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாயினி (பிரான்ஸ்), தரணியா (பிரான்ஸ்), சிறீஜனனி, கஸ்வின், கனிஸ்ரன், டன்சிகா, அபின்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு,
அடுவம்பற்று.

(C-6364)

தகவல்: குடும்பத்தினர்
077 037 8498

# மரண அறிவித்தல்

தோற்றம்
03
-
03
-
1967



மறைவு
14
-
04
-
2023

## திருநாவுக்கரசு நேசவரதன்

**(Marine Engineer - Captain)**

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு நேசவரதன் நேற்று முன்தினம் (14.04.2023) வெள்ளிக்கிழமை நல்லூரான் காலடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் கதிரவேலு திருநாவுக்கரசு - அனுஷியாபதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் சியாமளா திருநாவுக்கரசு (Civil Engineer) மதிமளா கோபிநாத் (Australia) திருநாவுக்கரசு ஜெயவரதன் (Electronic Engineer) மற்றும் சிறிமளா பிரசாத்குமார் (Attorney - at - law Legal officer - BOC வட மாகாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கி.கோபிநாத் (Australia) இந்திரகலா.J (கொழும்பு), ச.பிரசாத்குமார் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அரிநாத் (Australia), ரூபின்நாத் (Australia) விதூஜினி, ரிஷிகேஷான் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனோத், தக்ஷினியின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

30, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(15267)

077 753 6695, 077 325 4627,
077 753 6685

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலிருந்து யாழ்.வந்த பேருந்து மீது தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் கற்களை வீசியதில் பேருந்தில் பயணித்த பெண் ஒருவர் காயமடைந்து மாரவில வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாரவில தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் மாரவில ஹொரகொல்ல பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இந்தக் கல் வீச்சுத் தாக்குதலால் பேருந்தின் முன்பக்க கண்ணாடி சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேருந்தின் மீது கற்களை வீசிவிட்டு தப்பிச் சென்ற இருவரை மாரவில தலைமையகப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ள நிலையில், அவர்களை கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (4)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில்

# இலங்கை அரசுக்கு பைடன் தெளிவுபடுத்த வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள்

(கொழும்பு)

**இலங்கையின் உத்தேச பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் தனது எதிர்ப்பை வெளியிட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.**



இலங்கை மக்களின் உரிமைகளை முக்கியமானவையாக பெறுமதிமிக்கவையாக பைடன் நிர்வாகம் கருதினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிர்வாகத்திற்கு பைடன் நிர்வாகம் தெளிவான செய்தியை தெரிவிக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மனித உரிமையின் அனைத்து அளவுகோல்களிலும் தோல்வியடைந்துள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசியாவிற்கான பரப்புரை இயக்குநர் கரொலின் நாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் உரிமைகள் மிக முக்கியமானவை என பைடன் நிர்வாகம் கருதினால் இந்த சட்டம் முற்றிலும் மாற்றியமைக்கப்பட வேண்டும் அல்லது முற்றாக கைவிடப்பட வேண்டும் என்ற செய்தியை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நான்கு தசாப்த காலமாக சிறுபான்மையினத்தவர்களையும் தன்னை விமர்சிப்பவர்களையும் தடுத்து வைத்து சித்திரவதை செய்வதற்காக இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றது என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து பைடன் நிர்வாகமும் அமெரிக்க காங்கிரஸும்அமைதியாகயிருந்தால் அது மாற்றுநிலைப்பாடுடையவர்களை ஒடுக்குமுறைக்குள்ளாக்கும். இலங்கை அரசாங்கத்தின் திறனை மேலும் வலுப்படுத்தும் என தெரிவித்துள்ள நாஸ் பல தசாப்தகாலங்களாக மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக குரல் கொடுத்து வந்துள்ள இலங்கை யின் சிவில் சமூகத்தை அவமதிக்கும் செயலே உத்தேச சட்டம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (4)

# கடன் மறுசீரமைப்பு பேச்சுக்கு பாரிஸ் கிளப் தயார்

(கொழும்பு)

இந்தியா, பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளின் நிதி அமைச்சர்கள் மற்றும் இலங்கையின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றை பாரிஸ் கிளப் அமைத்துள்ளது.

இதனை தொடர்ந்து எதிர்கால கடன் நிவாரண ஒப்பந்தத்திற்கான விதிமுறைகள் பற்றி குறித்த குழு பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளது.

நியாயமான உண்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் மறுசீரமைப்புப் பேச்சுக்களின் ஒப்பீட்டுத் தன்மையை உறுதி செய்ய அனைத்து தொடர்புடைய தரப்பினருடனும் இணைந்து பணியாற்ற பாரிஸ் கிளப் விருப்பம் தெரிவித்துள்ளது.

மேலும் அனைத்து பொதுத் துறை கடன்வழங்குநர்களும் வழங் குநர்களும் இந்தச் செயற்பாட்டில் பங்கேற்கவும் பாரிஸ் கிளப் அழைப்பு விடுத்துள்ளது. (4)

# கடன் மறுசீரமைப்பில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை பாராட்டியது ஐ.எம்.எப்




(கொழும்பு)

கடன் நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் தமது திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கும் இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் மற்றும் ஐ.எம்.எப் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் இதன்போது கடன் பேச்சுவார்த்தையை விரைவில் முடிப்பதற்கான வழிகள் குறித்தும் ஆலோசித்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

உலக வங்கி குழு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வசந்த கால கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக இலங்கை பிரதிநிதிகள் அமெரிக்காவிற்கு சென்றுள்ளனர்.

இதன்போது உலக வங்கி, சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் மற்றும் அமெரிக்க அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடலை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# மொட்டுக் கட்சியின் தலைமை பதவிக்கு கடும் போட்டி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அடுத்த தலைமைத்துவத்திற்கு இரண்டு பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதாக சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கட்சியின் தலைமைப் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அடுத்த தலைவராக பசில் ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கருத்து தெரிவித்து வரும் நிலையில் கட்சியின் இளம் உறுப்பினர்களால் நாமல் ராஜபக்ஷவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அடுத்த தலைவர் தொடர்பில் பொது மக்கள் முன்னணியில் சில பிளவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4)

# எதிர்வரும் 20 ஆம் திகதி கட்சித் தலைவர்கள் கூட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளதாக பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தாண்டுக்குப் பிறகு நடைபெறும் முதல் கட்சித் தலைவர்கள் கூட்டம் இதுவாகும்.

இதன்படி, இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, புத்தாண்டின் பின்னர் முதலாவது பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (4)

# வெலிகமவில் இளைஞன் அடித்துப் படுகொலை

## சிறுவர்கள் உட்பட அறுவர் கைது

(கொழும்பு)

வெலிகம கலகந்த கொலந்தந்த பிரதேசத்தில் வீதியில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவரை அடித்துக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு சிறுவர்கள் உட்பட ஆறு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக வெலிகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்களும் அடங்குவதாக வெலிகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

நண்பர்களுடன் வீதியில் சென்று கொண்டிருந்தபோது பெண் ஒருவருடன் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதனையடுத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பெண் கொடுத்த தகவலின் பேரில் அவரது இரண்டு மகன்கள் உட்பட சிலர் வந்து அந்த இளைஞனை கொடூரமாகத் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம் - 2023

# கிறஸ்கொப்பர்ஸ் - AB இன்று பலப்பரீட்சை






விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணத்தின் இறுதிப்போட்டி இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இதில் 3 ஆவது தடவையாகவும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள கிறஸ்கொப்பர்ஸ் அணியை எதிர்த்து AB அணி மோதவுள்ளது.

இப்போட்டிக்கு D.R.A.T கௌரிபாகன் விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (4)

# மான்டோ கார்லோ டென்னிஸ் மெத்வதேவ், சிட்சிபாஸ் தோல்வி



மான்டே கார்லோ மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டி மொனாக்கோவில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த 2 ஆவது காலிறுதி சுற்றில் தரவரிசையில் 3 ஆவது இடம் வகிக்கும் கிரீஸ் வீரர் சிட்சிபாஸ், அமெரிக்காவின் டெய்லர் பிரிட்சுடன் மோதினார்.

இதில் பிரிட்ஸ் 6-2, 6-4 என்ற நேர் செட்டில் வீழ்த்தி அரையிறுதியை எட்டினார். மற்றொரு காலிறுதியில் டென்மார்க் வீரர் ஹோல்ஜர் ருனே, ரஷ்ய வீரர் மெத்வதேவுடன் மோதினார்.

இதில் ஹோல்ஜர் 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். ஏற்கனவே 3 ஆவது சுற்றில் முன்னணி வீரரான ஜோகோவிச் தோல்வி அடைந்து வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# குணமடைந்து வருகிறேன்

## ரிஷப்பண்ட்

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் ரிஷப் பண்ட் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் டெல்லி - டேராடூன் நெடுஞ்சாலையில் நடந்த கார் விபத்தில் படுகாயமடைந்தார்.

இதனால், ரிஷப் பண்ட் நடப்பு ஐ.பி.எல் தொடரில் விளையாடவில்லை.

ஆனால், அவர் டெல்லி கப்பிடல்ஸ் அணியின் கப்டனாக இருந்ததால் அந்த அணிக்கு தனது ஆதரவை பண்ட் தெரிவித்து வருகிறார்.

இந்நிலையில், ரிஷப் பண்ட் கூறுகையில், "நான் குணமடைந்து வருகிறேன். ஒவ்வொரு நாளும் குணமடைந்து வருகிறேன்.

நான் தேசிய கிரிக்கெட் அகாடமிக்கு வந்தேன். அங்கு டெல்லி கப்பிட்டல்ஸ் அணியினர் இருந்தனர். ஆகையால் நான் அவர்களைச் சந்தித்தேன்.

வீரர்களின் பயிற்சி எவ்வாறு உள்ளது என்பதை நான் பார்த்தேன். நான் அணியினருடன் கலந்துரையாடினேன்" எனத் தெரிவித்துள்ளார். (4)




## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 6 முதல் மாலை 6 வரை

**முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.** (15279)

077 076 0389
076 911 9371
076 739 0413

## வீடு வாடகைக்கு உண்டு

ஊரெழுவில் பலாலி பிரதான வீதியில் இருந்து 75m தூரத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**குடும்பமாக வசிக்க/ NGO /வியாபார நிறுவனங்களுக்கு பொருத்தமானது.** (15274)

தொடர்புகளுக்கு :

077 310 1357

## பராமரிப்பாளர் தேவை

கோப்பாய் பகுதியிலுள்ள வீட்டில் தங்கியிருந்து வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிக்கக்கூடிய பெண் பராமரிப்பாளர் தேவை.

**இலவச உணவு மற்றும் தங்குமிடத்துடன் கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.** (15274)

077 310 1357

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் (நிலப்பரப்பு) 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பரப்பின் விலை (125,000/=) ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து 1½ km தூரம்.
- புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதானகாபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி

(15279)

076 755 8606
077 638 5683

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15279)

076 733 6047
076 333 6079
07[illegible] 6093

## பொன்னியின் செல்வன் பாகம் : 2 VIP SHOW

யாழ்ப்பாணம் செல்வா திரையரங்கில் வரும் 28 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு Red Carpet VIP Show

Tickets :
077 473 7737
070 374 4444

(15276)

## வேலை வாய்ப்பு

Sales Rep

வேலை அனுபவமுள்ள ஒருவர் தேவை.

சிறந்த சம்பளம் மற்றும் கமிசன் வழங்கப்படும். (15276)

077 473 7737


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்புளுவன்சா வைரஸ் பரவும் அபாயம்!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**இன்புளுவன்சா வைரஸ் தொற்று பரவும் அபாயம் குறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

எனவே கர்ப்பிணிப் பெண்கள், நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் கைக்குழந்தைகள் இன்புளுவன்சா தொற்று குறித்த தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இன்புளுவன்சா தொற்றுக்கு இருமல், காய்ச்சல், சளி போன்ற அறிகுறிகள் காணப்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆகவே பொதுமக்களின் நடமாட்டம் அதிகளவு உள்ள பகுதிகளில் தேவையான சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

காய்ச்சல் அறிகுறி உள்ளவர்கள் பண்டிகைக் காலங்களில் சன நெரிசலான இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (4)

# திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனை




(கொழும்பு)

90 ஆயிரம் மில்லியன் ரூபாய் மதிப்பிலான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 19 ஆம். திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்படும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 25 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 25 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனை ஊடாக வழங்கப்பட உள்ளதென மத்திய வங்கி அறிவித்துள்ளது. (4)

# 2030 இல் கல்வி இலக்குகளை எட்டுவதற்கு 97 பில்லியன் டொலர் பற்றாக்குறை

## ஐக்கிய நாடுகள் சபை

(கொழும்பு)

2030 ஆம் ஆண்டு இலங்கை உட்பட உலக நாடுகளின் கல்வி இலக்குகளை எட்டுவதற்கு 97 பில்லியன் டொலர்கள் பற்றாக்குறையாக உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

2030 ஆம் ஆண்டில் அனைவருக்கும் நியாயமான மற்றும் தரமான கல்வியை வழங்குவதே ஐக்கிய நாடுகள் சபையின் 4 வது இலக்கு என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு அல்லது யுனெஸ்கோ இதற்கு 3 டிரில்லியன் டொலர் நிதி தேவை என்று மதிப்பிட்டுள்ளது.

கிழக்கு மற்றும் தெற்காசியா நாடுகளில் கல்வித் தரம் குறைவாக இருந்த போதிலும் இலங்கை முன்னணியில் இருப்பதாக உலக அமைப்பு கூறுகிறது.

2030ஆம் ஆண்டில் இலங்கையின் இடை நிலைக் கல்வி நிலை 81 சதவீதமாக இருக்கும் என்றும் அந்த அறிக்கைகள் கூறுகின்றன.

மத்திய, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில், இடைநிலைக் கல்விக்குத் தகுதியானவர்களில் 60% பேர் பாடசாலைக்கு செல்வதில்லை, இருபது சதவீதம் பேர் ஆரம்பக் கல்வியைப் பெறவில்லை.

அதற்காக 70 பில்லியன் டொலர்கள் ஒதுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது. (4)

# தேர்தலுக்கான திகதி தற்போது அறிவிக்க முடியாது

## நிமல் புஞ்சிஹேவா

(கொழும்பு)



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான திகதி மீண்டும் அறிவிக்கப்படமாட்டாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

ஏற்பாடுகள் மற்றும் ஏனைய வசதிகள் பூத்தியாகும் வரை இவ்வாறு உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான திகதி மீண்டும் அறிவிக்கப்பட மாட்டாது என அவர் கூறினார்.

தேர்தலை நடத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் இப்போது பேச யாரும் இல்லை என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (4)

# இராசிபலன்

**16.04.2023**
சித்திரை 03, ஞாயிற்றுக்கிழமை,
ஏகாதசி பிற்பகல் 5.27 மணிவரை

சதயம் பின்னிரவு 3.26 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை

ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம் -பூசம்

**வளவன்**

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வழிபாடு ஆனந்தம் தரும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** சமூதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டில் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கடகம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்** நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு, கௌரவமான நாள்.

**கன்னி** கொடுக்கல் -வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணி காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**தனுசு** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவ முன்வரலாம், வியாபார விரோதம் விலகும்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பொதுவாழ்வில் புகழ் கூடும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்** சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**மீனம்** காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

மனிதர்கள் எப்படி வந்தார்கள் என்பதை அவர்களது மரணமே காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாயில் குழு மோதல்

# கத்தி வெட்டுக்கு உள்ளாகி மூவர் மருத்துவமனையில்

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாவல்கட்டு பகுதியில் இடம்பெற்ற தகராறில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதே பகுதியைச் சேர்ந்த இரண்டு குழுக்களுக்குள் நேற்று முன்தினம் இடம்பெற்ற தகராறின் போது கத்தி வெட்டுக்கு உள்ளாகி மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபர் இருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (4-104)

# வீட்டுக்கடன் மீள அறவிடும் பணிகள் முன்னெடுப்பு

(கொழும்பு)

வீட்டுக்கடன் தொடர்பில் வீடமைப்பு அதிகார சபை அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

மக்களுக்கு வழங்கப்பட்ட சுமார் 5 பில்லியன் ரூபாய் வீட்டுக் கடனை மீள அறவிடும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ சூரிய ஆராச்சி தெரிவித்துள்ளார்.

பணவீக்கம் மற்றும் பொருளாதார நிலைமையால் மக்கள் வீட்டுக் கடனை மீள செலுத்துவதை தவிர்த்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தற்போது மாவட்ட முகாமையாளர்கள் ஊடாக கடனை மீள அறவிடும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# சாதகமான பாதையை நோக்கி இலங்கை நகர்கிறது

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

இலங்கை, மிகவும் சாதகமான பாதையை நோக்கி நகர்வதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகங்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் உட்பட சில நாடுகளின் பங்கேற்புடன் வோஷிங்டனில் கடந்த தினம் இடம்பெற்ற மாநாடு மிகவும் முக்கியமானதாகும்.

இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் நிதி அமைச்சர்களுக்கு இடையே நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில், எதிர்காலத்தில் பிரச்சினை ஏற்படாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டுள்ளார். (4)

# பகையை மறந்து மீண்டும் பதவியை ஏற்றுக் கொள்ளுங்கள்

## பீரிஸூற்கு பெரமுன அழைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியை பொறுப்பேற்குமாறு பாராளுமன்ற உறுப்பினர், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு பொதுஜன பெரமுன அழைப்பு விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறி டலஸ் தரப்புடன் இணைந்து பாராளுமன்றத்தில் செயற்பட்டு வருகின்ற நிலையில் இவ்வாறு மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

குறிப்பாக சுதந்திர மக்கள் சபை எனும் கட்சியை உருவாக்கி தற்போது அதில் பீரிஸ் செயற்பட்டு வருகின்றார்.

இதனால் பொதுஜன பெரமுன கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து பீரிஸ் நீக்கப் பட்டுவிட்டதாக கட்சி ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்நிலையிலேயே பீரிஸுக்கு, பொதுஜன பெரமுன கட்சி மீண்டும் அழைப்பு விடுத்துள்ளதாகவும் இது தொடர்பில் அவர் இன்னும் பதிலளிக்கவில்லை



எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (4)

# சமுர்த்தி வங்கி ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பு

(கொழும்பு)

சமுர்த்தி வங்கி ஊழியர்கள் நேற்று முதல் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

சரியான பதவி உயர்வு முறைமை இல்லாமை, சமுர்த்தி அதிகாரிகளுக்கு பயணக் கொடுப்பனவுகளும் அலுவலகக் கொடுப்பனவுகளும் வழங்கப்படாமை உள்ளிட்ட காரணங்களை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக சமுர்த்தி தொழிற்சங்க கூட்டமைப்பின் பிரதான செயலாளர் டபிள்யூ. ஜோதிரத்ன தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் கடந்த காலங்களில் வழங்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# தென்கொரியாவில் அநுரவை வரவேற்ற இலங்கையர்கள்



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தென்கொரியாவில் உள்ள இலங்கை சமூகத்தினர் மத்தியில் உரையாற்ற உள்ளார்.

இந்நிலையில் தென்கொரியாவிற்கு சென்றுள்ள அவரை, இன்சியான் சர்வதேச விமான நிலையத்தில் இலங்கைக் குழுவினர் வரவேற்றுள்ளனர்.

அவர் இன்று தென் கொரியாவில் உள்ள இலங்கை சமூகத்தினர் மத்தியில் உரையாற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# சஜித்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை - மனோ தகவல்

(கொழும்பு)

"ஐக்கிய தேசியக் கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் இணைத்துக் கூட்டணி அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

இந்த நகர்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சாதகமாக பதிலளித்த போதிலும் எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை" என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அந்த முயற்சியைக் கைவிட்டுள்ளதாகவும் மனோ கணேசன் கூறியுள்ளார்.

முன்னதாக ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையப் போவதாக வெளியான தகவலின் மத்தியிலேயே இந்தக் கூட்டணி முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சஜித்துக்கு பிரதமர் பதவியையும் வழங்க ரணில் ஒப்புக் கொண்டிருந்தார் எனவும் அந்தச் சலுகையையும் சஜித் ஏற்கவில்லை எனவும் கூறப்படுகின்றது. (4)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை மீளப்பெறாவிடின் நீதிமன்றை நாடுவோம்

## லக்ஸ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசு உடனடியாக மீளப்பெற வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

குறித்த சட்டமூலத்தை சட்டமா அதிபர் தயாரிக்கவில்லை எனவும், தனக்கு விசுவாசமான சட்டத்தரணிகள் ஊடாகவே அரசு இதனைச் செய்துள்ளது எனவும் கிரியெல்ல எம்.பி சுட்டிக் காட்டினார்.

அத்துடன், மேற்படி சட்டமூலத்துக்கு எதிராகத் தமது அணி நீதிமன்றம் செல்லும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 393
Viber 076 636 3378



# அடுத்த புதுவருடத்திற்குள் தீர்வு



சோபகிருது புதுவருடம் பிறந்துவிட்டது. இந்த வருடத்திலாவது தமிழினம் தனது உரிமைகள் சகலதையும் பெற்று நிம்மதியாக வாழ வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்போமாக.

" மழைக்கு முளைக்கும் காளான்கள் போல" என்றொரு பழமொழி உண்டு.எம் தமிழ் அரசியல் தலைமைகளின் செயற்பாட்டை பார்க்கும் போது குறித்த பழமொழியே நினைவுக்கு வருகிறது.

ஆம், தமிழினத்தின் தீர்வு தொடர்பில் இப்போது தமிழ் அரசியல் தலைவர்கள் எவரும் மூச்சுக் கூட விடுவதில்லை.

ஏன் என்று சிந்தித்தால் மறந்துவிட்டார்கள் என்ற பதிலே உயர்ந்து நிற்கிறது.

அட கறுமம்; தமிழினத்தின் வாக்குகளில் பாராளுமன்றம் சென்ற எம் தலைவர்கள் தமிழினத்தை மறந்து விட்டார்களோ? என்று கூறினார் ஓர் அன்பர் அதற்கு மற்றையவர் கூறினார்.

" அவர்களிடம் போய் கேட்டுப் பாருங்கள் மறந்தால் தானே நினைப்பதற்கு என்று கதைவிடுவார்கள் " என

வழமையாக, அடுத்த புத்தாண்டுக்குள் , அடுத்த பொங்கலுக்குள், அடுத்த ஆங்கிலப் புது வருடத்துக்குள் தமிழினத்துக்கு தீர்வு கிடைக்கும் என அறிக்கை விடுவார்கள். ஆனால் இம்முறை அவ் அறிக்கையிடல்களை எந்த ஊடகங்களிலும் காணவில்லை என்றவுடன் மனம் ஒரு மாதிரியாகிவிட்டது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் பல்லாயிரக் கணக்கான உயிர்களை பறி கொடுத்தோம். எத்தனை இலட்சம் பேர் அவையங்களை இழந்து இப்போது வரை தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் உண்பதற்கு வழியின்றி நோயுடன் துஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். அவர் தம் குடும்பங்கள் கால் வயிறு கஞ்சிக்கு வழியின்றி தவிக்கின்றது.

தமிழினத்திற்கு நாடு தான் இல்லை எனினும் வீடு ,நிலம், தோட்டம், துறவு என சகல வளங்களுடனும் வாழ்ந்தோம்.

இப்போது இவை எவையும் இல்லை. இவை இருந்ததாய் வெறும் வரலாறு தான் இருக்கிறது.

தவிர, இது பௌத்த சின்னங்கள் புதைந்து கிடக்கும் பூமி.

இங்கு நீங்கள் வாழ முடியாது என விரட்டியடிக்கப்படுவார்கள் என்ற ஏக்கத்துடன் வாழும் நிலை.

ஆனாலும் இவை எவையும் எம் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு தெரிவதும் இல்லை தெரிந்து கொள்ள முற்படுவதும் இல்லை.

ஏதாவது ஒரு வன்முறை நடந்தால் அதற்கு ஒரு கண்டன அறிக்கை, அடுத்த நாள் சிறு ஆர்ப்பாட்டம் அத்துடன் அவர்களின் கடமை முடிந்துவிடும்.

அதன் பின் அவர்கள் கொழும்பு சென்று அங்கு மறைந்து வாழத் தொடங்கிவிடுவர்.

தமது மக்கள், மொழி, மதம் என்பவற்றில் பெரும்பான்மை சிங்கள தலைவர்கள் வைத்திருக்கும் பற்றில் ஒரு சிறு துளியேனும் எம் தலைவர்களிடம் இருந்ததில்லை.

அவ்வாறு இருக்குமாக இருந்தால் அது அவர்களின் தேர்தல் வியூகமாகத்தான் இருக்குமே தவிர அவர்களின் ஆத்மார்த்தமான கருத்தாய் அது ஒரு போதும் அமைந்துவிடாது.

தொட்டதற்கெல்லாம் தந்தை செல்வாவை குறித்துக் காட்டும் எம் தலைவர்கள் தந்தை செல்வாவின் வழியில் செல்கிறார்களா எனக் கேட்டுப் பார்த்தால் அதன் பதில் எவ்வாறு அமையும் என்பதை நாம் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

என்ன செய்வது தமிழினம் பலமுறை ஏமாந்தாலும் மீண்டும் மீண்டும் தம்மை ஆதரிப்பர் என்ற நம்பிக்கை அவர்களிடத்திலே மிகப் பலமாக உண்டு.

தமிழினத்தின் விடயத்தில் இரண்டு முகங்களைக் கொண்டுள்ள இவர்கள் வடக்கிற்கு ஒரு முகத்தையும் தெற்கிற்கு வேறு முகத்தையும் காட்டுவது தான் இவர்களின் அரசியல் இராஜ தந்திரம்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தமிழ் தலைமை நினைத்திருந்தால் தமிழினத்துக்கான தீர்வைப் பெற்றிருக்கலாம்.

ஆனால் நடந்ததோ நல்லாட்சி அரசுக்கு ஆதரவு தெரிவித்து ஐ.நாவில் இலங்கை அரசுக்கு அவகாசம் வாங்கிக் கொடுத்த பெருமை எம் தலைவர்களையே சாரும்.

> இந்து மதத்தை அழித்து பௌத்தத்தை திணிக்கும் ஆட்சியாளர்கள் மீது இந்தியா எரிச்சல் கொண்டுள்ள இவ்வேளையில் தமிழ் தலைவர்கள் ஒன்றிணைந்து தமிழினத்து க்கான தீர்வைப் பெற் றுத் தரக் கோரினால் அது ஓரளவு வெற்றியளிக்கும் செயலாக அமையும்.

எமது ஆதரவில் ஐ.நாவில் அவகாசம் வாங்கிய இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன எனின்.

எக்காரணம் கொண்டும் படையினரைத் தண்டிக்க இடமளியோம் என இறுமாப்பு அறிக்கை இட்டதுவே.

ஐ.நா முன்றலில் நின்று இலங்கையில் இன அழிப்பு நடந்தது உண்மை. எனவே எம் தமிழ் சமூகத்திற்கு தீர்வை சர்வதேசம் பெற்றுத் தர வேண்டும் என கேட்க வேண்டியவர்கள் இலங்கைக்கு அவகாசம் கொடுத்துவிட்டு வந்ததன் விளைவே இது.

ஈழத்தமிழரின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் தயவின்றி எதுவும் நடக்காது என்ற உண்மையை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம்.

அந்தளவுக்கு பூகோள ரீதியில் இந்திய- இலங்கை உறவு பலம் பொருந்தியதான உறவாக இருக்கிறது.

ஆனாலும் ஈழத் தமிழினம் சார்பில் தமிழ் அரசியல் வாதிகள் எவரும் ஒன்றுபட்டு இந்தியாவிடம் கோரிக்கை விடுவதற்கு இன்று வரை தயாராக இல்லை என்பது தான் வேதனை.

இந்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை எப்படியாவது அமுல்படுத்த வேண்டும் என இந்தியா உறுதியாக இருந்தாலும் அதற்கு உறுதுணையாய் எம் தமிழ் தலைவர்கள் எவரும் இல்லை எனின் இந்தியாவின் தமிழர்கள் மீதான கரிசனை எவ்வாறானதாக அமையும் என்பதனையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மிக லாவகமாக காய்களை நகர்த்தும் தெற்கின் அரசியல் தலைவர்கள் இந்தியாவுடன் தமிழினத்தை ஒட்டவிடாமல் பார்த்துக் கொள்வதில் ஆர்வம் செலுத்துகின்றனர்.

தமிழ்- தமிழக மீனவர்கள் எல்லைதாண்டல் இதற்கு நல்ல உதாரணமாகிறது.

நிலை இதுவாக இருக்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா பயணமாகிறார் என்ற செய்தி வெளிவந்துள்ளன.

ஜனாதிபதி இந்தியாவிற்குச் செல்லும் இந்த நேரத்திலேனும் எம் தமிழ் தலைவர்கள் ஒன்று சேர்ந்து 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தையேனும் அமுல்படுத்த இலங்கை அரசை அழுத்துங்கள் எனக் கோரிக்கை விடுத்தால் , நிச்சயம் இந்திய அரசு செவி சாய்க்கும்.

சைவத்தை அழித்து பௌத்த மயமாக்கலை இலங்கையில் மிகத் தீவிரமாக மேற்கொண்டுவரும் ஆட்சியாளர்களின் செயற்பாடு இந்திய அரசை நிச்சயம் சினம் கொள்ள வைத்திருக்கும்.

இந்த நேரத்தில் எமக்குத் தேவையானதை இந்தியாவினூடே பெற்றுக் கொள்ள நாம் ஒன்று பட்டுநிற்போமா?

• அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். கலைத்துறைக்கு அளப்பெரும் சேவையாற்றிய வடமராட்சியைச் சேர்ந்த கலாபூசணம் வல்லிபுரம் கற்கண்டு அவர்கள் காலமாகிவிட்டார். அவரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து எழுந்த பண்டிதர் பரமலிங்கம், எங்கள் அன்புக்குரிய நயினாதீவு விவாகப்பதிவாளர் கா.இரத்தின சபாபதி அவர்கள் காலமாகிவிட்டார்.

தவத்திரு யோகர் சுவாமிகள் மீது அளவுகடந்த பக்தி பாராட்டிய இரத்தினசபாபதி அவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** எங்கட உருத்திரசேனை அமைப்பு நல்லதொரு வேலை செய்திருக்குது.


**கங்காணி:-** என்ன விதானையார் சொல்லுறியள். கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களன்.

**விதானையார்:-** யாழ்ப்பாணம் பண்ணைச் சுற்றுவட்டத்தில அழகான தெய்வீக அம்சம் பொருந்திய நாகபூசணி அம்மனின் உருவச்சிலை ஒன்றை உருத்திரசேனை அமைப்பினர் பிரதிஷ்டை செய்திருக்கினம்.

உலகத்தில் உள்ள ஈழத் தமிழ் உறவுகள் மதம் கடந்து நெக்குருகி வழிபடுகின்ற நயினை நாகபூசணித் தாய் அமைந்திருக்கும் மணிபல்லவத்தின் நுழைவாயிலாக இருக்கின்ற பண்ணைக் கடலோரத்தில நாகபூசணி அம்மனின் திருவுருவச் சிலை அமைந்திருப்பது எவ்வளவு பொருத்தம்.

இந்த அற்புதமான செயலைச் செய்த உருத்திரசேனை அமைப்பினரை மனதார வாழ்த்துகின்றோம்.

அவர்களின் செயற்பாடுகளுக்கு புலத்திலும் உலகமெங்கிலும் இருக்கின்ற ஈழத் தமிழ் உறவுகள் தங்களின்



## நயினையின் நுழைவாயில் கோபுரம் பண்ணையில் அமைய வேண்டும்

மேலான ஆதரவை வழங்க வேண்டுமென இந்த நேரத்தில கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு விதானையார் விசுவலிங்கம் கூற, ஆலடியில் இருந்த அத்தனை உறுப்பினர்களும் அதனைத் தலையசைத்து ஏற்றுக் கொண்டனர்.

இதன்போது வாத்தியார் வைத்திலிங்கம் விறுக்கென எழுந்தார்.

**வாத்தியார்:-** என்னைப் பொறுத்தவரை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை நினைத்திருந்தால், எத்தனையோ மேலான காரியங்களைக் கன கச்சிதமாகச் செய்திருக்கலாம்.

ஒரு முறை வலம்புரி ஆசிரியர் தலையங்கத்தில; யாழ்ப்பாணம் இராச பாதையில காணி வாங்கி, சிறுவர்களுக்கான இலவச வைத்தியசாலையொன்றை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை அமைக்க வேணும் எண்டு எழுதப்பட்டிருந்தது.

ஆனால் அது நடக்கவில்லை. ஆலய அறங்காவலர் சபை யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் ஏனைய நல்ல பணிகளுக்கும் உதவி செய்து வருவதென்பது மறுப்பதற்குரியதல்ல. இருந்தும் இன்னும் பல பணிகளை ஆலய அறங்காவலர் சபை செய்திருக்க முடியும்.

இப்ப கூட, தீவகத்து மாணவர்கள் உயர் கல்வி மற்றும் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு என்பவற்றை மேற்கொள்ள யாழ்ப்பாணம் வருகினம். இருந்தும் யாழ்ப்பாணத்தில தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்வதில அந்த மாணவர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கினம். [illegible] நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை நினைத்திருந்தால், யாழ்ப்பாணத்தில தீவக மாணவர்கள் தங்கியிருந்து உயர் கல்வி மற்றும் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான விடுதி வசதிகளை ஏற்பாடு செய்திருக்க முடியும். இப்பவும் காலம் போகவில்லை.

யாழ்ப்பாண நகரத்திற்கு அண்மையிலான கந்தர்மடம், திருநெல்வேலி, கொக்குவில், வண்ணார்பண்ணை ஆகிய இடங்களில காணி வாங்கி விடுதி அமைத்து, தீவக மாணவர்கள் இலவசமாகத் தங்கியிருந்து படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கலாம். இதுபற்றி ஆலய அறங்காவலர் சபை சிந்திக்க வேணும்.

அதேநேரம் எதைச் செய்யாவிட்டாலும் இந்த விடயத்தைச் செய்தே ஆக வேணும்.

(இவ்வாறு கூறிய வாத்தியார் வைத்திலிங்கம் சற்றுத் தாமதிக்க, அவசரப்பட்ட சாத்திரியார் சதாசிவம் என்ன வாத்தியார் சொல்ல வந்ததைச் சொல்லுங்களன் என்றார்.)

**வாத்தியார்:-** தீவகத்தில வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாக நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் விளங்குகிறது.

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில ஒன்றாகப் போற்றப்படுவது நயினா தீவு நாகபூசணி அம்மன் ஆலயமாகும்.

மணிபல்லவம் என்ற புண்ணியத்தலமாக விளங்குகின்ற நயினாதீவை நாகதீப என்று அழைக்கும் சிங்கள மக்கள் கௌதம புத்த பிரான் வந்திறங்கிய இடமென்று கூறி, அதன் வரலாற்றை- அதன் மரபு சார்ந்த அடையாளங்களை மாற்ற முற்படுகினம்.

இந்த நேரத்தில தீவகத்தின் நுழைவாயிலாக, வரலாற்றுச்சிறப்பு மிக்க எங்கள் மணிபல்லவத்தின் திருவழிப்பாதை தொடங்கும் இடமாக இருக்கின்ற யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் மிகப்பிரமாண்டமான நுழைவாயில் கோபுரம் ஒன்றை அமைக்க வேண்டும்.

இவ்வாறு அமைக்கப்படும் நுழைவாயில் கோபுரம் எங்கள் தமிழினத்தின் பெருமையை- நாகர்கள் வாழ்ந்த வரலாற்றை- நாகபாம்பு வழிபட்ட நயினை நாகபூசணி அம்மனின் பெருமையை எடுத்தியம்புவதாக அமைய வேண்டும்.


இதைச் செய்வதற்கு ஒட்டுமொத்த தமிழ் உறவுகளும் தமிழ் அரச அதிகாரிகளும் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும்.

இந்தப் பணியை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை காலதாமதமின்றி உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

இதன் கால்கோளாக பண்ணையில் நடந்த நாகபூசணி அம்மனின் பிரதிஷ்டை அமையட்டும் எனக் கூற, ஆலடியில் இருந்த அனைவரும் எழுந்து நின்று நயினை நாகபூசணி அம்மனின் அடையாளமாக-தீவகத்தின் நுழைவாயிலாக இருக்கும் பண்ணையில் மிகப்பெரும் நுழைவாயில் கோபுரத்தை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்ற, அதனைத் தானும் அங்கீகரிப்பது போல, ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தமிழ்ப் புத்தாண்டு எப்படி தமிழ்-சிங்கள புத்தாண்டாய் மாறியது என்பதைக் கூற முடியுமா?**

**சேந்து — மாதகல்**

**நல்லதுக்கு காலம் இல்லை என்கிறார்களே வியாசரே?**

உண்மைதான் நாம் ஒருவருக்கு உதவி செய்யப்போக அவர் எம்மை உபத்திரபமாய் பார்க்கும் நிகழ்வுகளின் அனுபவம் உண்டல்லவா?
உதவி செய்யப் போன நம்மை உதவி கேட்டு வந்தவர் போல நடத்தும் அவர்களை நினைத்தால் கோபம் பீறிட்டு எழும்.
எழுந்து பயன் என்ன? எல்லாம் விதி. இறைவன் எமது தலையில் எதை எழுதி வைக்கிறானோ அதே நடக்கும்.
ஆதலால் நாம் நம்மையும் நம் செயற்பாட்டையும் நிதானமாக்குவது சிறந்த பலனைத் தரும்.

**திகான் — வடமராட்சி**

**வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும் நெல் உயரக் குடி உயரும் குடி உயரக் கோன் உயரும் எனும் தொலை நோக்கு இப்போது இல்லாமல் போய் விட்டதே வியாசரே?**

விவசாயம் ஒரு நாட்டின் முதுகெலும்பு. முதுகெலும்பு இல்லாது ஒரு மனிதனால் எதையும் செய்து விட முடியாதல்லவா? அது போலதான் விவசாயம் இல்லாத நாடு வளர்ச்சி அடையாது.
வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும் நெல் உயர குடி உயரும். குடிக்குப்பின் தான் கோன் உயரும் என்று கூறப்பட்டுள்ளது.
ஆனால் நமது நாட்டில் எது உயரா விட்டாலும் கோன் உயர்வது மட்டும் நிச்சயம் என்றிருந்தால் எதைச் செய்துவிட முடியும்.

**தருஷ் — வதிரி**

**பயங்கரவாத தடைச்சட்டம் புதுப்பிக்கப்படுகிறதே?**

என்ன செய்வது இந்த நாட்டில் சிறுபான்மை இனம் என்ற அடைமொழி இருக்கும் வரை பயங்கரவாத தடைச்சட்டம் என்ற ஒன்று இருந்து கொண்டுதான் இருக்கும்.
தமது உரிமைகள் மறுக்கப்பட்டதால் ஆயுதம் ஏந்திய தமிழினத்தை அடக்கி ஒடுக்க எடுக்கப்பட்ட பயங்கர ஆயுதமே இந்த பயங்கரவாதத் தடைச் சட்டம்.
அதன் தாக்கத்தை முழுமையாய் அனுபவித்தது தமிழினம். அதில் சிறுபகுதியை சிங்களவர்களுக்கு பிரயோகித்ததற்கே இப்படி குளறியடிக்கிறார்கள் என்றால் தமிழரின் நிலை எப்படியிருக்கும்.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**மதுவன் — மீசாலை**

**காகத்தின் கூட்டில் குயில்கள் முட்டையிடுவதன் காரணத்தை கூற முடியுமா வியாசரே ?**

குயிலுக்கு கூடு கட்டவும் தெரியாது. முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொரிக்கவும் தெரியாது. ஆனால் புத்திசாலி காகங்களை ஏமாற்றி அவற்றின் கூட்டில் முட்டையிட்டு தம் இனத் தைப் பெருக்கும் சூட்சுமம் தெரியும்.
குயில் முட்டையை காகம் அடையாளம் காணுமாக இருந்தால் இன்றைக்கு குயில் இனமே அழிந்திருக்கும்.
ஆனால் இறைவனின் படைப்பின் பலன் அது. அதை எவராலும் மாற்றி எழுதிவிட முடியாது.

**சுதன் — குப்பிழான்**

**தமிழரிடத்தில் உள்ள பொருளாதார பலத்திற்கு ஏன் சர்வதேசத்திடம் கையேந்த வேண்டும்?**

தமிழினம் ஒரு காலத்தில் பொருளாதாரத்தில் தன் நிறைவு கண்ட இனமாக இருந்தது.
ஆனால் இன்று அவ்வாறான நிலை இல்லை.
இப்போது தமிழினத்தின் பொருளாதாரம் வெளிநாட்டுக் காசில் தங்கி இருக்கிறது.
இங்கு நோகாமல் நாம் இருக்க அங்கு அவர்கள் கடும் குளிரில் உழைத்து எமக்கு அனுப்புவதால் நாம் அதை எடுத்து வியர்க்காமல் உண்டு உறங்கி கொண்டிருப்போம்.
என்ன கொடுமை இனமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தமிழரிடத்தில் உள்ள பொருளாதார பலத்திற்கு ஏன் சர்வதேசத்திடம் கையேந்த வேண்டும்?**

**நிஷாந் — கொல்லங்கலட்டி**

**நாட்டின் பொருளாதாரம் முன்னேற நாம் என்ன செய்ய வேண்டும்?**

இலவசங்களுக்கு ஆசைப்படும் நிலையை மாற்ற வேண்டும்.
அரசாங்கங்களின் திட்டங்கள் என்ன என்பதைப் புரிந்து .கொண்டு நடக்க வேண்டும்.
வீட்டுத் திட்டத்திற்கு காசு தர அதில் கிடாய் அடித்துத் தின்பதும் ஆடு வளர்ப்பிற்கு உதவி செய்ய அந்த ஆட்டை இறைச்சியாக்குவதும் எமது பொருளாதாரத்தை ஒருபோதும் முன்னேற்றாது.
அரசுகள் மக்களை சோம்பேறிகள் ஆக்காத திட்டங்களை அமுல்படுத்துவது சிறந்தது.

**சங்கரசிவன் — வதிரி**

**சந்திரிகா அம்மையார் மீண்டும் அரசியலுக்கு வரப்போகிறாராமே வியாசரே ?**

அவரின் தற்போதைய பேச்சுகள் அவர் அரசியலுக்கு வருவதற்கான சமிக்ஞைகளாய் தெரிகின்றன.
ராஜபக்ஷக்களே இந்த நாட்டைக் கெடுத்து குட்டிச்சுவராக்கினர் என்பதில் மிகத்தீவிரம் காட்டுகிறார்.
அந்தளவிற்கு ராஜபக்ஷக்களை அவருக்குப்பிடிக்கவில்லை.
அந்த ஒற்றைக் காரணம் போதுமே எமக்கு (தமிழருக்கு) சந்திரிகாவைப் பிடிப்பதற்கு.
யார் குற்றியாவது அரிசி ஆனால் சரி.
யார் வந்தாலென்ன தமிழினத்துக்கு நீதியுடன் கூடிய தீர்வு வேண்டும்.

**விஜயரட்ணம் — நல்லூர்**

**தமிழ்ப் புத்தாண்டு எப்படி தமிழ்-சிங்கள புத்தாண்டாய் மாறியது என்பதைக் கூற முடியுமா?**

குருந்தூர் மலை எப்படி பௌத்த கோவில் ஆனதோ?
வெடுக்குநாறி ஆதிசிவன் எப்படி புத்தர் குடிகொண்டிருக்கும் இடமானதோ?
அரசமரம் நிற்கும் இடமெல்லாம் எப்படி புத்தர் குடிகொள்ளுகிறாரோ? அப்படி.
இவ்வாறு சொல்லிக்கொண்டே போகலாம்.
ஆனால் சொல்லி என்ன பயன்.
தலைக்கு மேல் வந்த வெள்ளம் போல எல்லாம் தலைகீழாய் மாறிவிட்டது.
இனி தலையால் நடந்தால் கூட முடியாது.




## முதலையும் குரங்கும்

ஒரு காட்டில் ஒரு குரங்கு வசித்து வந்தது. அந்த காட்டின் நடுப் பகுதியில் ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றின் கரையில் ஒரு நாவல் மரம் நின்றது. அதில் இருந்த நாவல் பழங்களைத் தின்று குரங்கு உயிர் வாழ்ந்து வந்தது.

அக்காட்டின் ஒரு பகுதியில் பெரிய ஆறு ஒன்று ஓடியது. அந்த ஆற்றில் எப்போதுமே நீர் பெருக்கெடுத்து ஓடும். ஆற்றிற்கு மறுபக்கத்தில் இருக்கும் காடு மிகவும் செழிப்பாகக் காணப்பட்டதால் அங்கு போய் பார்க்க வேண்டும் என்று குரங்கிற்கு ஆசை ஏற்பட்டது. ஆனால் குரங்கிற்கு அந்த ஆற்றைக் கடந்து போக பயமாக இருந்தது.

ஒருநாள் ஆற்றில் இருந்த முதலை ஒன்று நாவல் பழம் தின்று கொண்டிருந்த குரங்கைப் பார்த்து 'நாவல் பழம் மிகவும் ருசியாக உள்ளதா?' எனக் கேட்டது.

குரங்கும்.. "முதலையாரே! உமக்கும் சில நாவல் பழம் பறித்துத் தருகிறேன். சாப்பிட்டுப் பாருங்கள்" என்று நாவல் பழங்கள் சிலவற்றை பறித்து ஆற்றில் வாயைப் பிளந்து கொண்டிருந்த முதலையின் வாயில்



போட்டது. முதலையும் பழத்தை ருசித்துச் சாப்பிட்டது. அவற்றைச் சாப்பிட்ட முதலை இந்த சுவையான பழங்களை உண்ணும் குரங்கின் ஈரல் மிகவும் ருசியாக இருக்கும் என எண்ணியது. அதனால் முதலை குரங்குடன் நண்பனாகப் பழகி அதன் ஈரலை உண்ணத் திட்டம் போட்டது.

குரங்காரே நீர் எனக்கு நல்ல பழங்களை தந்து என் பசியை தீர்த்தீர். உமக்கு நான் ஏதும் உபகாரம் செய்யலாம் என்று யோசிக்கின்றேன் என்று கூறியது. அத்துடன் ஆற்றின் மற்றக் கரையில் நல்ல பழ மரங்கள் பழுத்து தொங்குகின்றன. நீர் அங்கு சென்றால் அப் பழங்களை நீயும் உண்டு எனக்கும் தரலாம் அல்லவா என்றது.

அதற்கு குரங்கு எனக்கும் அக்காட்டைப் பார்க்க வேண்டும் என்று பல நாளாக ஆசை இருக்கு. ஆனால் எனக்கு இந்த ஆற்றைக் கடந்து போகத்தான் பயமாக இருக்கிறது என்றது.

அதனைக் கேட்ட முதலை நான் இருக்கும் போது நீ ஏன் பயப்பட வேண்டும். இப்பவே எனது முதுகில் ஏறி இரு நான் உன்னை அக்கரையில் சேர்த்து விடுகின்றேன் என்றது. வஞ்ச எண்ணம் கொண்ட முதலையின் அன்பு வார்த்தையை நம்பிய குரங்கும் முதலையின் முதுகின் மீது தாவி ஏறி உட்கார்ந்தது.

தனது ஆசையை நிறைவேற்ற இதுதான் தருணம் என்று எண்ணிய முதலை குரங்கை நடு ஆற்றுக்கு கொண்டு சென்று அங்கே குரங்கின் ஈரலை சாப்பிட இருக்கும் தனது ஆசையைச் குரங்கிற்கு சொன்னது. அப்போது குரங்கு பதற்றமடையாது அப்படியா! நீ அதை முதலில் சொல்லவில்லையே என்று கூறி நீரில் நனைந்து ஈரல் பழுதாகி விடும் என எண்ணி தான் தனது ஈரலை எடுத்து மரக்கிளையில் வைத்துவிட்டு வந்துவிட்டதாகக் கூறி. என்னைத் திரும்ப மரத்தடிக்கு கொண்டு செல். நான் அதை எடுத்து மாட்டிக் கொண்டு வருகிறேன் என்று சமயோசிதமாகக் கூறியது. முதலையும் யோசிக்காது குரங்கு உண்மை சொல்வதாக எண்ணிக் கொண்டு அதை திரும்ப மரத்திற்கு அழைத்து வந்தது.

வேகமாக மரத்தில் ஏறிய குரங்கு "முட்டாள் முதலையே. ஈரலை உடலிலிருந்து கழற்றி மாட்ட முடியுமா? உன்னை நம்பிய என்னை ஏமாற்றி விட்டாயே..நியாயமா? என்று கேட்டது. முதலையும் ஏமாந்து திரும்பியது.

**நாமும் யாரையும் உடன் நம்பக் கூடாது. அவர்கள் நல்லவர்களா.. கெட்டவர்களா என நட்பு கொள்ளும் முன்பு பார்க்க வேண்டும்.**


## நான் வைரமுத்து பேசுகிறேன்... 03

இது அறிவுரை அன்று.

ஏனென்றால், அறிவுரை சொல்வதற்குத் தகுதியான வெள்ளிநரை எதுவும் என் தலையில் விழவில்லை.

இன்னொன்று. சொல்பவர் மட்டுமே நேசிக்கிற சொல்லப்படுபவர் யாராலும் நேசிக்க முடியாத ஓர் உரை அறிவுரை.

எனவே, இதில் நான் எழுத எத்தனிப்பவை என் ஆதங்கங்களும் எண்ணங்களுமே என்க.



எழுத்தைச் சுமந்துவரும் வாகனங்களைப் பற்றிச் சிந்திக்காமல் எழுத்தாளனைப் பற்றிச் சிந்திப்பது பாதிச் சிந்தனையில் போய்விடும் என்று நான் பயப்படுகிறேன்.

ஓர் எழுத்தாளனின் எழுத்தைச் சுதந்திரமாய்ச் சுமந்து வரும் முதல் வாகனம் பத்திரிகை.

ஆனால், சுதந்திரம் என்ற வார்த்தையைச் சௌகரியமாய் அர்த்தப் படுத்திக் கொள்ளும் நம் பத்திரிகைகள் வாழ்க்கையைப் பற்றியோ, கலையைப் பற்றியோ, எழுத்தைப் பற்றியோ ஒரு நோக்கத்தைத் தீர்மானித்துக் கொள்ள விரும்புவதில்லை. அல்லது தீர்மானிக்க விடுவதில்லை.

எனவே. நம் எழுத்தாளர்களில் சிலர் (சிலர் என்பதற்குப் பலர் என்றும் பாடம்) பத்திரிகைகளின் விளம்பரம் கிட்டாத பக்கங்களுக்கு

### எழுத்தும் - எழுத்தாளரும்

எழுத்துத் தயாரித்துக் கொடுக்கும் ஏவலர்களாகவே இருக்கிறார்கள் என்பது நம் நெஞ்சில் கசக்கிற நிஜமாகும்.

போட்டியில் புறப்பட்டுவிட்ட அச்சு இயந்திரங்களின் மத்தியில் "சிக்கித் தங்களை அவசரமாய்க் கசக்கிச் சாறு பிழிந்து கொடுப்பதற்கு அவர்கள் ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

பத்திரிகைகள் பல்கி விட்டதால் அத்தனை வாசகனுக்கும் அஜீரணம் வந்துவிட்டது. எனவே. பசியில்லா வாசகனுக்கு ருசி வேண்டியிருக்கிறது.

எனவே, ருசியை மட்டுமே பிரதானமாய் வைத்துச் சமைக்கப்படும் எழுத்துக்களையே தயாரித்துக் கொடுக்குமாறு அவசர எழுத்தாளனுக்கு ஆணையிடப்படுகிறது.

ஆகவே, உயிரிலிருந்து புறப்பட்டு உந்தி வழியாய் வந்து சிந்தி விழ வேண்டிய எழுத்து. விரலுக்கும் பேனாவுக்கும் மட்டுமே பிறந்த ரத்த சம்பந்தமில்லாத குழந்தையாய் இருக்கிறது.

எனவே உள்ளே ஜோதியில்லாத எழுத்துக்கள் வெளியே வெளிச்ச முலாம் பூசிக் கொள்கின்றன.

உள்ளீடுகள் வற்றிப் போனதால் மௌனங்களால் பக்கங்களை நிரப்பி விடுவதான உத்தியை எழுத்தாளன் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது.

நம் இளம் எழுத்தாளர்கள் தமிழ் உரைநடையை முடுக்கி விட்டிருப்பதால் அதற்கு ஒரு மிடுக்கு வந்திருக்கிறது என்பதையோ- வார்த்தைகளை ஆடம்பரமாய்ச் செலவழிக்காமல் சிக்கனச் சித்திரம் எழுதி விடுகிறார்கள் என்பதையோ - அவ்வப்போது வடிவச் சோதனைகளிலும் ஈடுபடுகிறார்கள் என்பதையோ யாரும் போற்றாமல் இருக்க முடியாது.

ஆனால் உத்தியென்பது ஓர் ஊன்றுகோல்தான்.

ஊன்று கோலே காலன்று.

வர்ணனை என்பது ஒரு கிளைதான் வேரன்று.

இளம் எழுத்தாளர்களில் சிலர் உத்திகளிலிருந்து விடுபடுவதற்குள்ளேயே அவர்களின் எழுத்துக்கு வயதாகி விடுகிறது. அலங்காரங்களே இல்லாத ஒரு கரு. தண்ணீரே இல்லா பூச்செடியாய்த் தவிக்கிறது.

அலங்காரங்களை அதிகமாகச் சுமந்த கரு. தண்ணீரில் மூழ்கிப் போன பூச்செடியாய்த் தத்தளிக்கிறது.

மாக்ஸிம் கார்க்கிகூட இந்தத் தங்கச்சிறையிலிருந்து தப்பிக்க முடியாமல் தவித்திருக்கிறார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாறுவதே தமிழர்களின் விதி

எதிரியைச் சுற்றி வளைத்துத் தான் விரும்பியதை எதிரியைக் கொண்டு செய்ய வைத்து தனக்குச் சேவகம் செய்விப்பதுதான் சிறந்த ராஜதந்திரமாகும். அத்தகைய ராஜதந்திரச் செயற்பாட்டில் சிங்கள ராஜதந்திரிகள் கைதேர்ந்தவர்கள்.

தென்னாசிய நாடுகளின் ராஜதந்திர கட்டமைப்பில் இலங்கைத்தீவின் சிங்கள ராஜதந்திர வட்டாரங்களை விஞ்சக்கூடிய அளவு ராஜதந்திர சாணக்கியம் மிக்க இராஜதந்திரிகள் இன்னும் இந்தப் பிராந்தியத்தில் தோன்றவில்லை. என்றுதான் சொல்ல வேண்டும்.

இலங்கையின் அரசியலில் அதன் வெளியுறவுக் கொள்கை மற்றும் ராஜதந்திர கட்டமைப்பு என்பன கடந்த 2300 ஆண்டுகால வரலாற்றில் அவை பௌத்த மகா சங்கத்தின் வழிநடத்தலில் கட்டமைக்கப்பட்டு இயக்கப்பட்டு வந்துள்ளது.

அது அதன் தொடர் வளர்ச்சியிலும் அனுபவத்திலும் வரலாற்றுப்படிப்பினைகளிலிருந்தும் நடைமுறைகளில் இருந்தும் தோன்றி இன்று சிங்கள பௌத்த தேசியவாதத்தை எந்த சந்தர்ப்பத்திலும் காக்க வல்ல கவசமாகப் பரிணமித்துள்ளது.

இத்தகைய ராஜேந்திர கட்டமைப்பைக் கொர்ண்டுள்ள சிங்கள இனம் இலங்கைத்தீவின் வரலாற்றில் காலனித்துவ காலத்தில் சிங்கள அரசு தனது முடியை மட்டுமே இழந்ததே தவிர அது தனது இறுக்கமான ராஜதந்திர கட்டமைப்பையும் அதன் தொடர்ச்சியையும் தனித்துவத்தையும் பௌத்த மா சங்கத்தின் ஊடாக பாதுகாத்ததோடு சிங்கள பௌத்த அரச பாரம்பரியத்தைத் தொடர்ந்து பேணிவந்துள்ளது.

அத்தகைய தொடர் ராஜதந்திர பாரம்பரியத்தைக் கொண்டுள்ள சிங்கள தேசத்தின் தலைவர்களை இராஜதந்திர ரீதியில் வெற்றி கொள்வது என்பது இலகுவான காரியம் அல்ல.


அவர்கள் முன்னே பார்ப்பது போல பாசாங்கு செய்துகொண்டு பின்னாலுள்ளவர்களை வீழ்த்தும் தந்திரசாலிகள். எவ்வாறு எதிரிகளை வீழ்த்தினார்கள், வீழ்த்துகிறார்கள் என்று எதிரி அனுமானிக்க முன்பே அடுத்த தோல்விக்கான பொறியையும் ஏற்பாடு செய்துவிடுவர்.

இது ஈழத் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் இந்திய அரசியல் தலைவர்களுக்கும் மேற்குலக ராஜதந்திர வட்டாரங்களுக்கும் பொருந்தும்.

இவர்கள் அனைவரும் சிங்கள இராஜதந்திரிகளிடம் தொடர்ந்து தோற்றுப்போன வரலாற்றையே பெரிதும் கொண்டுள்ளனர்.

பூமிப்பந்தின் ஒரு சிறு புள்ளியான இலங்கைத் தீவின் அரசியலைப் பெரு வல்லரசுகளாலும் கூட இலகுவில் தாம் விரும்பிய வடிவத்திற்கு மாற்றியமைக்கமுடியவில்லை. பல தடவை முயன்றும் தோல்வியே அடைந்திருக்கின்றனர்.

"யானைக்குப் புயம் பலம் எலிக்கு வளைபலம்" சர்வுதேச அரசியல் என்ற யானையையும் பிராந்திய அரசியல் என்று இந்திய யானையையும் எலி அளவான சிங்கள



ராஜதந்திரம் தனக்கு நெருக்கடி வருகின்றபோது பௌத்த மகா சங்கம் என்கின்ற வளைக்குள் புகுந்து ஒளித்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும்.

இதனை இலங்கையின் சிங்கள அரசியல் தலைவர்களான டி. எஸ்.சேனநாயக்க, டட்லி சேனாநாயக்க, சேர் ஜோன் கொத்தலாவல, பண்டாரநாயக்கா, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, ஜே ஆர் ஜெயவர்த்தன, ரணசிங்க பிரேமதாசா, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இன்றைய ரணில் வரை அனைவரும் தமக்கு நெருக்கடி வருகின்ற போது பௌத்த மகாசங்கம் என்கின்ற வளைக்குள் புகுந்து ஒளித்துக்கொண்டு தங்களையும் பாதுகாத்து, சிங்கள அரசையும் பாதுகாத்துக் கொள்வர்.

பௌத்த மகா சங்கமே சிங்கள அரசைப் பாதுகாக்கின்ற பாதுகாப்புக் கவ்சமாகும். இந்த அடிப்படையில் இலங்கை சுதந்திரம் அடைகின்ற, அடைந்த காலத்தில் சிங்கள அரசுக்கு தலைமை தாங்கிய டி.எஸ். சேனநாயக பிரித்தானியா, இந்தியா, என்ற வெளியுலக எதிரிகளையும், உள்ளகத்துக்குள் கம்யூனிஸ்ட்டுகள், ஈழத் தமிழர், மலையகத்தமிழர், முஸ்லிம்கள் என பலதரப்பட்ட எதிரிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவரானார்.

அப்போது அவர் இந்தியாவுடன் நல்லுறவைப் பேணுவதாக நாடகம் ஆடினார். இந்தியக் காங்கிரஸுடன் இணைந்து இந்தியக் கூட்டாட்சிக்குள் தாம் இணைந்து வரப் போவதாக ஒரு பாசாங்கு செய்தார்.

வாக்குறுதிகளை நேருவுக்கு வழங்கினார். சுதந்திரம் கிடைப்பதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்னே 1947 ஆம் ஆண்டு இறுதியில் பிரித்தானிய அரசுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்து திருகோணமலை துறைமுகத்தையும், கட்டுநாயக்க விமான நிலையத்தையும் பிரித்தானியாவுக்கு கையளித்தார்.

அதன்மூலம் இந்திய மேலாண்மையைத் தடுத்து நிறுத்தியதோடு மாத்திரமல்ல இந்தியா காங்கிரஸுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு நேருவுக்கு முதுகில் குத்தினர். அடுத்து உள்ளகத்திலிருந்த மிகப் பிரதான எதிரி மலையகத் தமிழர்களும் அதன் தொழிற்சங்கங்களும். அதனால் பலம் பெற்று இருந்த கம்யூனிஸ்ட்டுகளும்தான்.

இந்த கம்யூனிஸ்டுகளை வெற்றி கொள்ள இரண்டாம் எதிரியான ஈழத்தமிழர் தரப்பின் தலைமைத்துவமாக அன்றிருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஜி.ஜி.பொன்னம்பலத்தை அரவணைத்து கடற்றொழில் விவசாய கைத்தொழில் அமைச்சுப் பதவியும் கொடுத்து அரசாங்கத்தில் இணைத்ததன் மூலம் தன்னை பலப்படுத்தி கம்யூனிஸ்டுகளை தோற்கடிப்பதற்கான வியூகத்தை வகுத்தார்.

அதன் அடிப்படையில் மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்ததன் மூலம் அவர்கள் வாக்குரிமையையும் பறித்து தொழிற்சங்கங்களை முடமாக்கி கம்யூனிஸ்டுகளை வீழ்த்திவிட்டார். தமிழுக்குச் சம அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும், தமிழர்களுக்குப் பிராந்திய சுயாட்சி அலகு பொருத்தமானது எனச் சொல்லி வந்த கம்யூனிஸ்ட்டுகளை ஈழத் தமிழர்களிடமிருந்து பிரித்தது மாத்திரமல்ல மலையகத் தமிழர்களையும் வீழ்த்தி கம்யூனிஸ்ட்களையும் வீழ்த்தி ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தி விட்டார்.

அதன் மூலம் இந்தியாவை இலங்கையின் பிரச்சினை மற்றும் இந்து சமுத்திர பிராந்திய அரசியலில் இந்தியாவை ஒரு சக்கர வியூகத்திற்குள் சிக்க வைத்துள்ளது. இதன் மூலம் தமிழ் ஈழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை முடக்கி புலிகளைக் களத்தில் இருந்து அகற்றிவிட்டது.

அதனைத் தொடர்ந்து அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்கி இந்து சமுத்திரத்தில் சீனாவைக் கால்பதிக்க வைத்தது மாத்திரமல்ல இந்தியாவைச் சீனாவினதும் சக்கர வியூகத்திற்குள்ளும் சிக்கவைத்துவிட்டது. இப்போது இந்து-பசுபிக் பிராந்திய அரசியலில் எழுந்த நெருக்கடிகளைத் தணிப்பதற்கு இந்தியாவுடன் நட்புறவு பூணுவதாகவும், பௌத்த மதத்தை இந்தியா தமக்கு தானமாகத் தந்தது என்று பாசாங்கும் செய்கிறது.

அத்தகைய ரணில் விக்கிரமசிங்க இப்போது இந்தியாவுக்குப் பயணமாகவுள்ளார். அவர் இந்தியாவுக்குக் காவிச் செல்வது என்ன? இந்தியாவுக்குக் கொடுக்கப் போவது என்ன? என்று பலரும் பரவலாகப் பேசக்கூடும்.

உண்மையில் ரணில் விக்கிரமசிங்க இறந்துபோன, படுகொலை செய்யப்பட்ட, சிங்கள தேசத்தில் புதைக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தூசி தட்டி அதனால் உருவாக்கப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு தங்கமுலாம் பூசி இந்திய அரசுக்கு காட்டப் போகிறார். அதனைத்தான் நடைமுறைப்படுத்தப் போவதாகப் பலமுறை இலங்கையில் இருந்து சொல்லிவிட்டார். அதில் ஒரு அணுவளவும் மாற்றம் இன்றுவரை ஏற்படவில்லை.

இருப்பினும் மீண்டும் அதே பாணியில் இந்தியாவிற்கு நம்பிக்கை ஏற்படுத்தக்கூடியதான ஒரு திட்ட வரைவை 13ஆம் திருத்தச் சட்டத்திற்குச் சற்று மேலானது எனக் காட்டி ஒரு வாக்குறுதியை மட்டுமே இந்தியாவுக்கு அவரால் வழங்க முடியும்.

அதைத்தான் அவர் செய்வார் அதனை இந்திய ராஜதந்திரிகளும் அரசியல்வாதிகளும் நம்பக்கூடிய வகையில் மிகக் கச்சிதமாகவும் செய்து முடிப்பார்.


இந்திய பல்தேசிய நிறுவனங்களின் பெரும் முதலீடுகளை இலங்கைக்குள் கொண்டு வருவதும் (மூலதன உட்பாச்சலை) ஏற்படுத்துவதுமாக இருக்கும்.

அது மட்டுமல்ல இந்திய அரசிடம் பெரும் உதவித் தொகையையும் கடனையும் பெற்று இலங்கை திறைசேரியின் கஜானாவை நிரப்பிக் கொண்டுதான் திரும்புவார்.

இந்த விடயத்தில் மீண்டும் மீண்டும் இந்திய அரசும் இராஜதந்திரிகளும் ஏமாற்றப்படுவார்கள். அவ்வாறே ஈழத் தமிழ் அரசியல் தலைவர்களும் இலவு காத்த கிளியாக ஏமாற்றம் அடைவார்கள். இந்தியாவையும், ஈழத் தமிழர்களையும் தொடர்ந்து இலங்கை இராஜதந்திரம் அவமான கரமாக ஏமாற்றியதுதான் கடந்த 75 ஆண்டு கால வரலாறு பதிவு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணடிமை எனும் பேரரக்கன்!



பெண்களே தேசத்தின் இரு விழிகள்
பேரம் பேசியும் பெருந்தன்மைகளை மிழந்தாலும்
தாய்க்குலமாக என்றும் மிளிரும் மனிதம்

வாழ்வுக்குள் பல கேள்விகள்
வசதி வாய்ப்புகளை தினமும் தேடி
பலராலும் வியந்து பேசி
வாழ்க்கையில் பயணிக்கின்றோம்
அனுதினமும் யாம்

சமத்துவம் நீதியென
சமவுரிமையை இவ்வுலகு
மகளிருக்குக் கொடுக்காது

ஜாதி வெறியாட்சியாளரால்
சிறையடிமை
பெண்ணடிமைத்துவம்

ஆணாதிக்கம்
முடக்கும் பெண்களின் உரிமைகளை
சீரழிக்கும் சமநிலையை
யாரால் தீர்மானிக்கும்

சகோதரியெனும் பந்தபாசம் நிர்க்கதியாக்கும்
காவியமாகும் பெண்களின் சரித்திரம்
விசித்திரமாக பெண்ணடிமை
தத்துவமுடைப்போம்

அக்கராயன் கவியரசன் KJ றெக்ஸ்

## உயிரை மாய்க்காதே

இறைவன் தந்த உயிரை மனிதன் அழிப்பது தவறல்லவா
உலகில் மனித வாழ்வு மகத்தான வாழ்வல்லவா
பிரச்சினைகள் வருவதை சிந்தித்து செயற்படனுமே
சமூகத்தில் பல்வேறு அழுத்தங்கள் வருமல்லவா

வாழ்க்கையை வளமாக்க நேரிய சிந்தனை - அவசியமே
கஷ்டமான வலிகளுக்கு தீர்வு கண வழி உண்டல்லவா
எம்மை நாமே அழிப்பதால் தீர்வு கிடைத்திடுமா
காதலில் தோல்வியா கலங்காதே உன் பின்னால் வாழ்க்கை உண்டல்லவா

அர்த்தமுள்ள வாழ்வாக அமைய அனுதினம் - முயற்சிக்கனுமே
நல்ல நட்பை நாளும் வளர்த்துக் கொள்ளனுமே
நண்பனிடம் மனம் விட்டுப் பேசுவது - நன்றல்லவா
பரீட்சையில் தோல்வியா பல தடவை விழுந்தாலும்
நம்பிக்கை கைகொடுக்குமே

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரமல்லவா
பிள்ளைகளைத் தவிக்க விட்டு பிழையான முடிவு எடுக்காதே
வாழந்து காட்டனும் சவால்கள் மத்திதனில்
வாழ்க்கைய்ய முடிக்க அவசர முடிவு எடுக்காதே.

எஸ்.பி.தனா,தெல்லிப்பழை.



## பிஞ்சுகளை வாழ விடுங்கள்



பாலியல் சுகத்தை பாரெங்கும் தேடும்
சமூக விரோதிகளே சந்தர்ப்பவாதிகளே

அரும்புகளை முகர்ந்து ருசிக்கும் அர்ப்பர்களே
பஞ்சு மேனியில் பிஞ்சுக் குழந்தைகள்

நாளை மலரும் இன்றைய மொட்டுக்களை
கழுகுக் கண்ணால் கருக்கிடாதீர்கள்

சிறுமைப் பருவம் சிரிக்கும் பருவம்
மறந்தும் கண்ணீரைக் கொட்டித்து விடாதீர்கள்

அறிவுடை குருதெனும் நாமங் கொண்டவர்களே
உணர்வுகளைக் கட்டுப்படுத்தி வாழப் பழகுங்கள்

நாளைய நாட்டின் களங்குலை அகற்றிட
இன்றே குழந்தைகளை வாழ விடுங்கள்

மாணவச் செல்வங்களை பதின்மச் சிறுமிகளை
பிய்த்(து) எறிந்து பிணங்களாக்கி வாழாதீர்கள்
குழந்தைகள் குதூகலித்து வாழ்வதே இன்பம்.

உடுவிலூர் கலா,

## மௌனத்தின் தேடல்- 604



## சுவடி விளையாடு பாப்பா

விதம்விதமாய் விளையாட்டு
வீதியிலே ஒரு சுவட்டு
மனம் மகிழ்ந்து வண்ணப் பறவைகளாய்
வான வெளிதனிலே சிறகு அடித்துப் பறந்து
கள்ளமிலா வெள்ளைச் சிந்தையாய்
கார் ஓட்டிட மகிழ்ந்து
சின்னச்சின்ன ரோஜாப்பூக்கள்
ஆனந்த மழைதனிலே நனைந்து
சுவடி விளையாடுது பாப்பா
கோடி நன்மை பெறுது பாப்பா.

கும்பவாழியான், உடுப்பிட்டி.

## மௌனத்தின் தேடல்- 605



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## நாளை நமதே

சக்கரங்கள் இல்லாப் பூமி
மிக விமானம் போன்று தன்னுடன்
சூரியனையும் சுற்றுவது போன்று
எரிபொருள் ஏதுமின்றி
இச்சிறுவர்களின் சிறுவண்டி
இயங்குவது ஒற்றுமையால்
எண்ணம் தான் வாழ்வென்பதால்
திண்ணமாய் நல்லன நடக்கும் நாளை
மங்கையராய்ப் பிறப்பதற்கு
மாதவம் வேண்டும் என்னும்
கவிமணியின் கண்ணியமான கூற்றும்
இங்கு உண்மையாகின்றது.

க. நாகராசா, நுணாவில்.

## ஓரம் போ! ஓரம் போ!

ஓரம்போ ஓரம்போ
சிங்கார வண்டி வருது
ஓரம்போ ஓரம்போ
சீறிப் பாய்ந்து வண்டி வருது
ஓரம் போ ஓரம் போ
நிப்பாட்டி வழி கேட்க நேரமில்லை
ஓரம்போ ஓரம்போ
பெல் இல்லை பிரேக்குமில்லை
ஓரம் போ ஓரம் போ
அடிச்சுவிட்டா முன்வாய்ப் பல்லு இல்லை
ஓரம் போ ஓரம் போ.

இ. உதிஸ்ரன்,தெல்லிப்பழை.

## ஆட்கொண்டு விட்டதோ!

மரக்கார் உருட்டும் மகவுகள்
ஸ்ரேறிங் பிடிக்கும் சாரதி
ஒற்றுமை உவகை உடற்பயிற்சி
என ஒருமித்தே தரும்
வெற்றி தோல்வியிலா விளையாட்டை
தனிமையில் இருந்து போனைத் தடவும்
மனநோய் விளையாட்டு
ஆட்கொண்டு விட்டதோ?

பிரமன், கொக்குவில்.

## முடியவில்லை!

சிறுவயதில் நாம்
சிறகடித்த நினைவுகள்
சில்வண்டின் சிணுங்கலாய்
சிவந்து நிற்கிறது மனதில்
புழுதி வயல்களில்
புரண்டு எழுந்தோம்
அழுக்காகி வீட்டில்
அடி வாங்கினோம்
முடியவில்லை இப்போது
ஸ்மாட் போன்களை - எம்
சிறுவர்களின் கைகளில் இருந்து
பிரித்து விட

ஜி.ஜிசானா, சங்கானை.

## கனவானதே?

புழுதியில் குளித்தோம்
வெயிலில் காய்ந்தோம்
நாவல் மரம் ஏறி
பழம் உண்டு மகிழ்ந்தோம்
மாங்காய் எறிந்து வீழ்த்தி
உப்புத் தூள் சேர்த்து
சுவைத்து திருப்தி கண்டோம்
இவை அனைத்தும் இப்போ
கனவு போல் ஆகிவிட்டதுவே!

இந்திரபுத்திரன்.

## தள்ளிப் போ! தள்ளிப் போ!

தள்ளுவண்டி வருகிது..., வருகிது...
பெல்லும் இல்லை பிறேக்கும் இல்லை
அடிச்சு விட்டால் பல்லுமில்லை
தள்ளிப்போ! தள்ளிப்போ!

பி.மதுஷ்சன், தையிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணடைந்த ட்ரம்ப்... பதற்றத்தில் அமெரிக்கா

அமெரிக்காவின் நியூயார்க் மாகாணத்தில் உச்சக்கட்ட பதற்றமும் பரபரப்பும் தொற்றிக் கொண்டிருந்தன. அங்குள்ள மன்ஹாட்டன் நகரம் முழுவதும், குடியரசுக் கட்சியினரின் கோஷங்களே ஒலித்துக் கொண்டிருந்தன. மன்ஹாட்டன் நீதிமன்றத்துக்கு வெளியே திரும்பும் பக்கமெல்லாம் கேமராக்களுடன் பத்திரிகையாளர்கள் குழுமியிருந்தனர். அங்கிருக்கும் வீதிகள் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தது நியூயார்க் காவல்துறை. அதிரடிக்குப் பெயர் போன அமெரிக்க அரசியல்வாதி டொனால்ட் ட்ரம்ப், குற்றவியல் வழக்கில் சரணடைய மன்ஹாட்டனுக்கு வந்தது தான் இத்தனை பரபரப்புக்கும் காரணம். அமெரிக்க வரலாற்றில், முன்னாள் ஜனாதிபதி ஒருவர் குற்றவியல் வழக்கை எதிர்கொள்வது இதுவே முதன்முறை. நீதிமன்றத்தில் ட்ரம்ப் ஆஜரான போது நடந்தது என்ன... அதன் தாக்கம் என்ன?

அந்த 57 நிமிடங்கள்!

2006 ஆம் ஆண்டில், ஆபாசப் பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ் என்பவரை கோல்ஃப் கிளப் ஒன்றில் சந்தித்த ட்ரம்ப், அவருடன் சில காலம் தொடர்பிலிருந்ததாகச் சொல்லப்படுகிறது. 2016 ஆம் ஆண்டு குடியரசுக் கட்சியின் வேட்பாளராக ட்ரம் அறிவிக்கப்பட்ட பிறகு, தனக்கும் ட்ரம்ப் புக்கும் இடையேயான உறவை ஊடகங்களில் சொல்ல முயன்றார் டேனியல்ஸ். இதைத் தெரிந்து கொண்ட ட்ரம்ப், தன்னுடைய வழக்கறிஞர் மூலம் டேனியல்ஸுக்கு 1.3 லட்சம் அமெரிக்க டொலரை 'லஞ்சமாக' வழங்கினார். இந்தப் பணப் பரிமாற்றம் சட்டவிரோதமானது என எழுந்த குற்றச்சாட்டில்தான் தற்போது சிக்கியிருக்கிறார் ட்ரம்ப்.



இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக, கடந்த வாரம் கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டதை அடுத்து, ட்ரம்ப் கைது செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது. கைது நடவடிக்கையைத் தவிர்க்க நினைத்த ட்ரம்ப், ஏப்ரல் 4 ஆம் திகதி அன்று, தானே முன்வந்து நியூயார்க்கிலுள்ள மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் சரணடைந்தார். நீதிமன்றத்துக்கு அருகே கூடியிருந்த ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள், அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பிக் கொண்டேயிருந்தனர்.

மன்ஹாட்டனில் ட்ரம்ப்புக்கு எதிராகவும் சில இடங்களில் பேர ணிகள் நடைபெற்றன. இந்த நிலையில், மதியம் 2:30 மணி அளவில் நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைந்த ட்ரம்ப்பைக் கைது செய்தது காவல்துறை. கைவிலங்கு மாட்டப்படவில்லை என்றாலும், ட்ரம்ப்பின் கைரேகைகளை ஸ்கேன் செய்வது உள்ளிட்ட அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றியது காவல்துறை. பிறகு, அவரை நீதிபதி முன்பும் ஆஜர்படுத்தியது.

பொதுவெளியில், பொதுவாக ட்ரம்ப்பின் முகத் தில் எப்போதும் உற்சாகம் ததும்பும். ஆனால், அன்று நீதிமன்றத் தில் மிகவும் சோகமாகவே காணப்பட்டார். ஸ்டார்மி டேனியல்ஸ் விவகாரத் தில் ட்ரம்ப் மீது சுமத்தப்பட்ட 34 குற்றச்சாட்டுகளை வாசித்த நீதிபதி, 'குற்றங்களை ஒப்புக் கொள் கிறீர்களா?' எனக் கேட்க, 'நான் குற்றம் செய்ய வில்லை' என மறுத்தார் ட்ரம்ப். 57 நிமிடங்கள் நீதிமன்றத்திலிருந்த ட்ரம்ப், இதைத் தவிரப் பெரிதாக எதையும் பேசவில்லை. தன் வழக்கறிஞர்கள் குழுவுடன் மட்டுமே சில நிமிடங்கள் ஆலோசனை செய்தார். அமெரிக்காவில், வன்முறையற்ற குற்றங்களுக்கு ஜாமீன் தேவையில்லை என்பதால், விசாரணை முடிந்ததும் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார் ட்ரம்ப். நீதிமன்றத் திலிருந்து வெளியேறிய ட்ரம்ப், சொந்த விமானத்தின் மூலம் ஃபுளோரிடா விலுள்ள தனது வீட்டுக்கு விரைந்தார். மேலும், 'இந்த வழக்கில் அடுத்ததாக டிசெம்பர் 4 ஆம் திகதி தான் ட்ரம்ப் நேரில் ஆஜராக வேண்டியிருக்கும்.

வீட்டுக்குச் சென்ற பிறகு அங்கு கூடியிருந்த தன்னுடைய ஆதரவாளர்களிடம், "இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை. அமெரிக்க வரலாற்றின் இருண்ட காலத் தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நான் செய்த, செய்யும் ஒரே குற்றம் இந்த தேசத்தை அழிக்க நினைப்பவர்களை எதிர்த்து, அச்சமின்றி போராடுவது மட்டுமே. அமெரிக்கா நரகமாக மாறிக் கொண்டிருக்கிறது" என்றார்.

## 2024 இல் போட்டியிடுவாரா?

சர்வதேச அரசியல் பார்வையாளர்களோ, "1920 இல் சோஷியலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த யூஜின் டெப்ஸ் சிறையிலிருந்து கொண்டே தேர்தலில் போட்டியிட்டார். அமெரிக்க அரசியல் மைப்பில் அதற்கான வழிமுறைகள் இருக்கின்றன. எனவே, இந்த வழக்கில் ட்ரம்ப்புக்கு தண்டனை வழங்கப்பட்டாலும், 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிடு வதைத் தடுக்க முடியாது. என்கிறார்கள்.

76 வயதாகும் டொனாலட் ட்ரம்ப், '2024 இல் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை வீழ்த்தி நிச்சயம் மீண்டும் ஜனாதிபதி அரியணை ஏறுவேன்' எனக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார். கடந்த காலங்களில் கணிக்க முடியாத பல்வேறு விடயங்களைச் செய்திருக்கும் ட்ரம்ப்பின் அடுத்தகட்ட நகர்வுகள் எப்படியிருக்கும் என்பதை காத்திருந்து பார்ப்போம்!

# மீண்டும் போர்ப் பதற்றம்... பதறும் உலக நாடுகள்!

இஸ்ரேல் - பாலஸ்தீனத்துக்கிடையிலான போர்ப் பதற்றம் மீண்டும் அதிகரித்து வருகிறது. கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்த மோதல் சம்பவங்கள், தற்போது இஸ்லாமியர்கள் ரமழான் நோன்பு அனுசரித்து வரும் வேளையில் தீவிரமடைந்திருப்பது, உலக நாடுகளைக் கவலை கொள்ளச் செய்திருக்கிறது.

மத்திய கிழக்கில் அமைந்திருக்கும் இஸ்ரேலில் 70 சதவிகிதம் யூதர்களும் 20 சதவிகிதம் இஸ்லாமியர்களும் 10 சதவிகிதம் கிறிஸ்தவர்களும் வாழ்கிறார்கள். இஸ்ரேலை யொட்டிய பாலஸ்தீனத்தில் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். இஸ்ரேலை ஒரு நாடாக ஐ.நா அங்கீகரித்திருக்கிறது. ஆனால், அத்தகைய அங்கீகாரத்துக்காக பாலஸ்தீனம் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது. இந்த இரு நாடுகளின் முக்கியப் பிரச்சினையாக நிலவுவது



ஜெருசலேம் நகரின் உரிமை.

கிழக்கு ஜெருசலேமின் பழைமையான பகுதியில் 'அல் அக்சா மசூதி' அமைந்திருக்கிறது. அதுதான், இஸ்லாமியர்களின் மூன்றாவது பெரிய புனிதத்தலம். அந்த மசூதியைச் சுற்றி "வெஸ்ட் வால்" என்ற சுவர் அமைந்திருக்கிறது. அதை, 'டெம்பிள் மவுண்ட்' என்று அழைக்கும் யூதர்கள், அதைத் தங்களின் புனிதத்தலம் எனக் கருதுகிறார்கள். 1948 இல் இஸ்ரேலுக்கும் எகிப்து, ஜோர்டான், சிரியா உள்ளிட்ட மத்தியக் கிழக்கு நாடுகளுக்குமான போரில் மேற்கு ஜெருசலேம் இஸ்ரேல் வசமும் கிழக்கு ஜெருசலேம் ஜோர்டானின் கட்டுப்பாட்டிலும் வந்தன. அதன் பிறகு 1967 இல் நடந்த அரபுப் போரில் கிழக்கு ஜெருசலேமையும் இஸ்ரேல் இராணுவம் கைப்பற்றியது. அதைத் தொடர்ந்து, ஒருங்கிணைந்த ஜெருசலேமைத் தங்களுடையதாக இஸ்ரேல் உரிமை கொண்டாடி வருகிறது. இதற்கு பாலஸ்தீனர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

இந்தச் சூழலில், தற்போதைய ரமழான் மாதத் தொழுகைக்காக 'அல் அக்சா மசூதிக்குச் செல்லும் இஸ்லாமியர்கள் மீது, இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியிருக்கிறது. கடந்த மார்ச் 25 அன்று மசூதிக்குள் தொழுகையில் ஈடுபட்டிருந்த இஸ்லாமியர்களை வலுக்கட்டாயமாக இஸ்ரேல் பொலிஸார் வெளியேற்றினர்.

மீண்டும் ஏப்ரல் 4 ஆம் திகதி ஆயுதங்களுடன் மசூதிக்குள் நுழைந்த இஸ்ரேல் இராணுவம், இஸ்லாமி யர்களை அங்கிருந்து வெளியேற்ற முயன்றது. அப்போது, இரு தரப்பினரிடையே ஏற்பட்ட மோதலையடுத்து 300 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் பொலிஸார் கைது செய்தனர். இதற்குப் பதிலடியாக, ஹமாஸ் படையினர், இஸ்ரேலை நோக்கி ராக்கெட் தாக்குதல் நடத்தினர்.

பாலஸ்தீனியர்கள் பயங்கரவாத குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டால், அவர்களின் குடியுரிமை இரத்துச் செய்யப்படும் என்றும், அவர்களின் வீடுகள் புல்டோசரால் இடிக்கப்படும் என்றும் இஸ்ரேல் அரசு ஏற்கெனவே அறிவித்திருந்தது. தற்போது, அதை நடைமுறைப்படுத்து வதற்கான முயற்சியில் இஸ்ரேல் இறங்கியிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அப்படியொரு நடவடிக்கையில் இஸ்ரேல் இறங்கினால், நிலைமை மேலும் மோசமடைய வாய்ப்பு இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"கொள்ளைக்காரரை ஒரு புறமும் பூர்வகுடிகளை ஒருபுறமும் பாதி திருப்தி செய்தும் பாதி பயமுறுத்தியும் வைத்திருந்த கார்ணத்தாலேயே அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவனின் ஆதிக்கம் பலப்பட்டிருந்தது.

கொள்ளையர் மனத்தையும் கலைத்து விட்டேன். பூர்வக்குடிகளையும் விரோதப்படுத்தி விட்டேன். ஆகவே இரண்டு சங்கடங்களுக்கு இடையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன் கூடிய மட்டும் என் சொற்படிதான் கேட்டாக வேண்டும்.

# கடல் புறா




காலத்தின் 57

## காதலுக்குப் பொய்யும் தேவை

இனி அக்சயமுனைத் தலம் என் வசம் தான். அதுமட்டுமல்ல, சூளுக்களின் பலத்தையே பெரும்பாலும் கடற்பகுதியில் நம்பி இருக்கும் ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்துக்கு, இன்றைய சச்சரவுக்குப் பிறகு அவர்கள் உதவி அதிகமிருக்காதென்பது உறுதி. சூளுக்கள் திறமை மிக்க மாலுமிகள். அவர்கள் கடற் போராட்ட அரங்கிலிருந்து விலகினால், ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்தின் ஒரு கை உடைந்தது போலத்தான். இது பெரும் லாபம், என்று அத்தனை நிகழ்ச்சிகளையும் அவற்றால் ஏற்பட்ட பயன்களையும் கணக்குப் பார்த்துத் தன்னைத்தானே திருப்தி செய்து கொண்டான்.

இருப்பினும் பலவர்மன் கடைசியாகச் சொல்லி விட்டுப் போன சொற்கள் அப்பொழுதும் அவன் காதில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன. "இளையபல்லவரே! நெருப்பைக் கிளறிவிட்டிருக்கிறீர். இதனால் பெரும் விபரீதங்கள் விளையும்" என்று அவன் சுட்டிக் காட்டியது.

விளையக்கூடிய விபரீதங்களை (தன் மரக்கலம் தீக்கிரையாகக்கூடும் என்ற உண்மை உட்பட) விபரித்ததும் அப்பொழுதும் அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. அதனால் ஏற்பட்ட பெரும் கவலை, தன் செய்கையால் தன் மீது மண்டியிட்ட பெரும் பொறுப்புகள். அவன் மனத்தைப் பல திசைகளில் அலைக்கழித்துக் கொண்டிருந்தன. ஆனால் அந்தப் பொறுப் புகளை விடப் பெரும் பொறுப்பு அதே நேரத்தில் அக்ஷயமுனைக் கோட்டைக்குள் அவன் மீது சுமத்தப்பட்டு வந்ததை மட்டும் அவன் உணரவில்லை. அதைப்பற்றி மஞ்சளழகிக்கும் அவள் தந்தைக்கும் நடந்த விவாதத்தை மட்டும் அவன் அறிந்திருந்ததால், நங்கூரத்தை அந்த இரவிலேயே எடுத்துக் கப்பலின் பாய்களை விரித்துக் காற்று வரும் திசையில் போயிருப்பான். அத்தகைய பெரும் பொறுப்பைப் பற்றித் தான் பலவர்மன் தன் மாளிகையில் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தான்.

வில்வலனும் பூர்வக்குடிகளும் சென்றபின்பு இளையபல்லவனை நோக்கி உஷ்ணமான வார்த்தைகளை உதிர்த்து வீட்டு மஞ்சளழகியுடன் கோட்டைக்குள் சென்ற பலவர்மன் தனது மாளிகையை அடைந்த பின்பும் சிதறிய சிந்தனைகளால் கலவரப்பட்ட உள்ளத்துடனிருந்ததால் அவன் முகத்தில் பெரும் கவலையும் குழப்பமும் காணப்பட்டன.

இரவு நிகழ்ச்சிக்கு இளையபல்லவன் வந்ததால் தன்க்கு மட்டுமின்றிக் கோட்டை மக்களுக்கும் பெரும் தீமை விளையக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டதை அவன் சந்தேகமற உணர்ந்திருந்தான். மனிதர்களைத் தின்னும் பதக் இனத்தாரால் கோட்டைக்குள்ளும், சூளு இனத்தாரால் நீரிலும் ஏற்படக்கூடிய பெரும் விபரீதங்களை அவன் அறிந்திருந்தான். கோட்டையின் காவல் சற்று அயர்ந்தாலும் மக்களை பதக் இனத்தார் தூக்கிச் செல்லவும் வீடுகளுக்குத் தீ வைக்கவும் தயங்க மாட்டார்களென்பதும் அக்சயமுனைத் தளத்தில் இனி எந்தக் கப்பலும் அபாயமின்றி ஓர் இரவு கூட நிற்க சூளுக்கள் அனுமதிக்கமாட்டார்களென்பதும் அவனுக்குத் திட்டமாகப் புரிந்திருந்தது. தவிர, அன்றைய இரவு நிகழ்ச்சியின் விளைவாக ஏற்பட்டுள்ள சூளுக்களின் விரோதம் ஸ்ரீவிஜயத்தின் கடல் சக்தியையும் சிறிது குறைக்குமாதலால், சக்கரவர்த்தியான ஜெயவர்மனுக்கும் தான் சமாதானம் சொல்ல வேண்டி யிருக்குமென்பதும் அவனுக்குப் புரிந்தேயிருந்தது. இத்தைய சிக்கல்களால் குழம்பிய மனத்துடனிருந்த பலவர்மன் அன்று தனது அறையை அடைந்ததும் பணியாள் கொண்டு வந்த உணவைத் தொடக் கூட மறுத்து ஆசனத்தில் சாய்ந்து கிடந்தான்.

அவன் எதிரில் அவனைப் போலவே தீவிர சிந்தனைகளுடன், ஆனால் வேறுவித சிந்தனைகளுடன், ஆனந்த நினைப்புகளுடன், அமர்ந்திருந்த மஞ்சளழகியும் தன் எதிரே தங்கக் கலத்திலிருந்த உணவைத் தொட்டுப் பார்க்கவில்லை.

அவள் மனத்தில் கவலையில்லை. பெருமிதமிருந்தது. துக்கமில்லை, மகிழ்ச்சி இருந்தது. கடற்கரை நிகழ்ச்சிகளால் உணர்ச்சிகளின் சுழற்சியும் எழுச்சியும் இருந்தன. அதே அறையில் அன்று காலையில் பெரும் நிதானத்தையும் சாகசத்தையும் காட்டிய இளையபல்லவன் அன்று இரவில் தன் கலையால் இரண்டையும் கைவிட்டதை நினைத்துத் தன் கலையின் சக்தியை எண்ணிப் பெருமிதம் கொண்டாள் அவள்.

தன் கையாட அவன் உணர்ச்சிகளாட எழுந்து மேடை நோக்கி வந்ததை நினைத்துத் தான் விரித்த வலை அந்த வாலிபனை எத்தனை சுலபத்தில் வளைத்து விட்டது என்பதை நினைத்து மகிழ்ச்சி கொண்டாள். வில்வலனுடன் போரிட்டதாலும் பிறகு நேர்ந்த கொலையாலும் கூட்டம் குழம்பி இருந்த சமயத்திலும் அந்த வாலிபன் தன் இடையைக் கையால் தொட்டுத் தூக்கி தன்னைப் புரவி மீது அமர்த்தியதை எண்ணி உணர்ச்சிகளின் எழுச்சியாலும் சுழற்சியாலும் பெரிதும் தவித்துக் கொண்டிருந்தாள் அந்தப் பேரழகி.

"சே! சே! எத்தனை வெட்கம் கெட்டவள் நான்? என்று மஞ்சளழகி தன்னைத்தானே கண்டித்துக் கொண் டாள். அது உண்மையில் கண்டனமா? இல்லையென்பது பருவத் துடிப்பின் வசப்பட்ட அந்தப் பைங்கிளிக்குத் தெரியும்.

தெரிந்தும் கண்டித்துக் கொண்டதாகவே பாசாங்கு செய்தாள் அவள். "இப்படி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதுதான் காதலா? காதலுக்குப் பொய் அவசியமா? என்றும் தன்னைத்தானே அவள் கேட்டுக் கொண்டாள். "ஆம், பொய் அவசியம் காதல் [illegible] பொய்களைப் போன்றதல்ல. மெய்யின்பம் தருவது. ஆனால் காதலே பொய்யாகக் கூடாது. காதலைப் பற்றிப் பொய் சொல்லிக் கருத்தை ஏமாற்றலாம். இதயத்தை மட்டும் ஏமாற்றக் கூடாது. எப்படி ஏமாற்ற முடியும்? அதற்குத்தான் உண்மை தெரியுமே. இல்லாவிட்டால் இப்படி ஏன் "படக் படக்" கென்று இதயம் அடித்துக் கொள்கிறது!" என்று உள்ளத்துக்குச் சொல்லித் தவித்த மஞ்சளழகி, இதயத்தை ஆசுவாசப்படுத்த இதயமிருந்த பகுதியில் கையையும் வைத்துக் கொண்டாள்.

எத்தனையோ குழப்பத்திலும் கவலையிலும் எதிரே உட்கார்த்திருந்த பலவர்மன் தன் மகளின் முகத்தில் மாறி மாறி விளையாடிய உணர்ச்சிகளைக் கவனிக்கத் தவறவில்லை. எதையும் சுலபத்தில் ஆராயும் சக்தி கொண்ட அவன் கூரிய அறிவுக்கு அவள் இதயத்தைப் புரிந்து கொள்வது ஒரு பிரமாத காரியமாய் இல்லை. தன் மகளின் மனத்தை இளையபல்லவன் ஓரளவு பறித்துக் கொண்டு விட்டானென்பதை நடன நிகழ்ச் சியின் போதே புரிந்து கொண்டான் பலவர்மன். சுபத்திரை நடனத்தின் போது நீட்டப்பட்ட அபிநயக் கரங்கள் உண்மையில் சுபத்திரையின் கரங்கள் அல்லவென்பதையும் மஞ்சளழகியின் இதயக் கரங்களேயென்பதையும் அப்பொழுதே புரிந்து கொண்டான் அவன்.

திரும்பக் கோட்டைக்கு வந்தபோது தன்னுடன் போசாமலே அவள் வந்ததையும் தன்னைப் போலவே உணவைத் தொடாமல் சிந்தனையில் ஆழ்ந்து விட்டதையும் அந்தச் சிந்தனையில் மகிழ்ச்சியின் சாயை எழுந்து முகத்தில் படருவதையும் கண்ட பலவர்மன் சித்தத்தில் திடீரென ஓர் எண்ணம் உருவெடுத்தது. அந்த எண்ணம் மட்டும் ஈடேறினால் பல கஷ்டங்கள் விடிந்து விடும் என்ற முடிவுக்கும் அவன் வந்தான். அதனால் புத்தம் புதிய பெரும் பொறுப்பு இளையபல்லவன் தலையில் சுமத்தப்படும். பிறகு அவன் தன்னிடமிருந்து தப்ப முடியாது என்பதையும் அவன் உணர்ந்தான்.

அந்தப் பொறுப்பை மட்டும் இளையபல்லவன் மீது சுமத்தி விட்டால், தனக்கும் கோட்டைக்கும் ஏன் அரசாங்கத்துக்குங் கூடப் பெரும் பலமும் பாதுகாப்பும் ஏற்பட்டு விடும் என்று அறிந்ததால் தன் மகளை அணுகி தன் யோசனையை மெள்ள மெள்ள விபரிக்க முற்பட்டான். அணுகித் தன் அவன் விபரிக்க விபரிக்க மஞ்சளழகி பெரும் திகைப்புக்குள்ளானாள்.

தன் இதயத்தில் விளைவித்துக் கொண்ட காதலின் பொய்யல்ல அது. விபரீதமான மெய் என்று எண்ணிய அவள் தந்தையின் மெய்யும் தனது பொய்யும் கலந்த அந்த யோசனை ஏற்க முடியுமா, ஏற்பது முறையா என்று தன்னைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டாள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம், காதல், வேலை என மகிழ்ச்சியாக வாழும் ருத்ரனின் குடும்பத்தின் மேல் ஒரு பெரிய கடன் வந்து விழ, அதிலிருந்து மீள வெளிநாட்டில் ஐடி வேலைக்குச் செல்கிறார் ருத்ரன். அதனாலேயே ருத்ரனின் மொத்த குடும்பமும் வில்லன் பூமியால் கொல்லப்படுகிறது.

வில்லன் பூமி யார்? அவர் ஏன் ருத்ரனின் குடும்பத்தைக் கொன்றார், பூமியை ருத்ரன் பழிவாங்கினாரா என்பதை எளிதில் யூகிக்கும்படியான மசாலா சினிமா டெம்ப்ளேட் காட்சிகளை வரிசையாக அடுக்கி, திரைக்கதை அமைத்திருக்கிறார் கே.பி.திருமாறன், அதற்குத் திரையில் உயிர் கொடுத்திருக்கிறார் அறிமுக இயக்குநர் கதிரேசன்.



# ருத்ரன்

## திரைவிமர்சனம்

இதற்கிடையில் பிரியா பவானி ஷங்கரை திருமணம் செய்யும் ருத்ரன் தனது தாய் மற்றும் மனைவியை விட்டு பிரிந்து வெளிநாட்டிற்குச் செல்கிறார். 6 வருடாங்களுக்கு பின், சென்னைக்கு மீண்டும் வருவதற்கு 3 மாதங்கள் இருக்கும் நிலையில் ருத்ரனின் தாய் மரண மடைகிறார். மனைவி பிரியா பவானி ஷங்கர் காணாமல் போகிறார்.

ருத்ரன் தாய் எப்படி இறந்தார்? பிரியா பவானி ஷங்கருக்கு என்ன நடந்தது? இதன் பின்னணி என்ன என்பதை ருத்ரன் கண்டு பிடித்தாரா? என்பதே படத்தின் மீதிக் கதை. ஹீரோவாக வரும் ராகவா லாரன்ஸ் ஆக்ஷன், காதல், பாசம், செண்டிமெண்ட் என அனைத்து காட்சிகளிலும் சுப்பராக நடித்துள்ளார். குறிப்பாக செண்டிமெண்ட் காட்சிகளில் ஸ்கோர் செய்கிறார்.

5 ஸ்டார் கதிரேசன் தயாரித்து முதல் முறையாக இயக்கி புது வருடப்பிறப்பு அன்று வெளிவந்துள்ள திரைப்படம் ருத்ரன். ராகவா லாரன்ஸ், பிரியா பவானி ஷங்கர், சரத்குமார், பூர்ணிமா பாக்கியராஜ். நாசர், காளி வெங்கட் என பல நட்சத்திரங்கள் இப்படத்தில் நடித்துள்ளனர். 4 வருடங்களுக்குப் பின்னர் ராகவா லாரன்ஸ் நடிப்பில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று திரைப்படம் வெளிவந்துள்ளது.

**இதனாலேயே இப்படத்தின் மீது மாபெரும் எதிர்பார்ப்பு இருந்தது. அத்தகைய எதிர்பார்ப்பை ருத்ரன் படம் பூர்த்தி செய்ததா?**

தனது தாய் பூர்ணிமா பாக்கியராஜ், தந்தை நாசருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார் ருத்ரன் (ராகவா லாரன்ஸ்). குறிப்பாக தனது தாயின் மீது அளவு கடந்த பாசத்தை வைத்துள்ளார். இந்த சமயத்தில் கதாநாயகி பிரியா பவானி ஷங்கரை சந்திக்கும் ருத்ரன் காதலில் விழுகிறார். இந்தக் காதல் திருமணம் வரை செல்லும் நேரத்தில், ருத்ரனின் தந்தைக்கு பிரச்சினை வருகிறது.

தனது நண்பனை நம்பி 6 கோடி கடன் வாங்கினார் நாசர். ஆனால், அவர் நாசரை ஏமாற்றிவிட்டு 6 கோடி பணத்துடன் எஸ்கேப் ஆகிவிட்டார். க்டன் கொடுக்க முடியாமல் நண்பனின் துரோகத்தை தாங்க முடியாமல் மரணமடைகிறார். நாசரின் மரணத்திற்கு பின், வாங்கிய 6 கோடி கடனை வட்டியுடன் 7 கோடியாக திருப்பி கொடுக்க வேண்டுமென கடன் கொடுத்தவர் கேட்க, தந்தையின் டிராவல்ஸ் நிறுவனத்தை விற்று 3 கோடி ரூபாவை முதலில் கொடுக்கிறார் ருத்ரன். பின் மீதமுள்ள 4 கோடி கடனை அடைக்க அதிக சம்பளம் கிடைக்கும் வெளிநாட்டு வேலைக்கு செல்கிறார்.

ராகவா லாரன்ஸ் தாயாக நடித்துள்ள பூர்ணிமா பாக்கியராஜின் நடிப்பு படத்திற்கு பலம். மனைவியாக வரும் பிரியா பவானி ஷங்கர் தனக்கு கொடுத்த கதாபாத்திரத்தில் அழகாக நடித்துள்ளார். முழுமையான வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ள சரத்குமாரின் நடிப்பு மிரட்டல். மற்றபடி அனைவரும் அவரவர் கதாபாத்திரத்தில் நன்றாக நடித்துள்ளார்கள்.

முதல் முறையாக இயக்குநர் அவதாரம் எடுத்திருக்கும் தயாரிப்பாளர் கதிரேசனுக்கு வாழ்த்துக்கள். எடுத்துக்கொண்ட கதைக்களம், சொல்ல வந்த கருத்து இரண்டையும் சிறப்பாக செய்துள்ளார். ஆனால் திரைக்கதையில் சற்று சொதப்பிவிட்டார் என்று தான் சொல்ல வேண்டும்.

நம்பவே முடியாத ஆக்ஷன் காட்சிகள், ஓவர் மசாலா, பார்த்து பார்த்து சலித்துப் போன பழிவாங்கும் கதை என கொமர்ஷியல் விடயங்கள் தான் படத்தில் நிரம்பி இருக்கிறது. ஆனால், தாய் தந்தையை தனியாக விட்டுவிடாதீர்கள் என கதிரேசன் சொல்ல வந்த கருத்து, இன்றைய காலகட்டத்தில் தேவைப்படும் விடயமாக இருக்கிறது. அதற்குப் பாராட்டுக்கள்.

முதல் பாதி சற்று தொய்வாக இருந்தாலும், இரண்டாம் பாதி விறுவிறுப்பாக செல்கிறது. குறிப்பாக கிளைமாக்ஸ் காட்சி செம மாஸ். ஜி.வி. பிரகாஷ் குமாரின் பாடல்கள் மற்றும் பின்னணி இசை இரண்டுமே சூப்பர். குறிப்பாக கிளைமாக்ஸ் பாடல் வெறித்தனமாக இருந்தது. ஒளிப்பதிவு கலர்ஃபுல். எடிட்டிங் ஓகே. ஸ்டண்ட் இன்னும் கூட மசாலாவை குறைத்திருக்கலாம்.



## 1978-1981 ராக்கி பாய் எங்கே? ஹின்ட் கொடுத்த வீடியோ வைரல்



கேஜிஎஃப் 1 மற்றும் கேஜிஎஃப் 2 ஆகிய இரண்டு படங்களின் மிகப்பெரிய பிரம்மாண்ட வெற்றியை அடுத்து இப்போது இந்தியா முழுவதும் அறியப்பட்ட நடிகராக யஷ் மாறியுள்ளார். இந்நிலையில் இந்த படம் வெளியாகி ஒரு வருடம் ஆவதையொட்டி படக்குழு பிரத்யேக வீடியோவை வெளியிட்டுள்ளனர். அந்த வீடியோவில் கே ஜி எப் படத்தின் மூன்றாம் பாகம் குறித்த தகவலையும் படக்குழு சேர்த்துள்ளனர். 1978 முதல் 1981 வரை இடைப்பட்ட காலத்தில் ராக்கி பாய் எங்கே சென்றார்? என்ன ஆனார்? குறித்த தகவல்கள் அதில் இடம்பெறும் என தெரிகிறது. இந்த வீடியோ தற்போது இரசிகர்களால் பெரிதும் பகிரப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அடிமைப்பெண்
பாடியவர் : டி.எம். செளந்தரராஜன்
இசை: கே.வி.மகாதேவன்



தாயில்லாமல் நானில்லை
தானே எவரும் பிறந்ததில்லை
எனக்கொரு தாய் இருக்கின்றாள்
என்றும் என்னைக் காக்கின்றாள்

தாயில்லாமல் நானில்லை...

ஜீவ நதியாய் வருவாள் என்
தாகம் தீர்த்து மகிழ்வாள்
தவறினைப் பொறுப்பாள்
தர்மத்தை வளர்ப்பாள் தரணியிலே
வளம் சேர்த்திடுவாள்

தாயில்லாமல் நானில்லை...

தூய நிலமாய்க் கிடப்பாள் தன்
தோளில் என்னை சுமப்பாள்
தன்னமயில்லாமல் நான் மிதித்தாலும்
தாய்மையிலே மனங்கனிந்திடுவாள்

தாயில்லாமல் நானில்லை...

மேக வீதியில் நடப்பாள் உயிர்
மூச்சினிலே கலந்திருப்பாள்
மலர்முடி தொடுவாள் மலர் மனம் தருவாள்
மங்கல வாழ்வுக்குத் துணையிருப்பாள்
மலர்முடி தொடுவாள் மலர் மனம் தருவாள்
மங்கல வாழ்வுக்குத் துணையிருப்பாள்

தாயில்லாமல் நானில்லை...

ஆதி அந்தமும் அவள்தான்
நம்மை ஆளும் நீதியும் அவள்தான்
ஆதி அந்தமும் அவள் தான்
நம்மை ஆளும் நீதியும் அவள்தான்
அகந்தையை அழிப்பாள்
ஆற்றலைக் கொடுப்பாள்
அவள் தான் அன்னை மகாசக்தி
அகந்தையை அழிப்பாள்
ஆற்றலைக் கொடுப்பாள்
அவள் தான் அன்னை மகாசக்தி
அந்தத் தாயில்லாமல் நானில்லை
தானே எவரும் பிறந்ததில்லை
எனக்கொரு தாய் இருக்கின்றாள்
என்றும் என்னைக் காக்கின்றாள்
தாயில்லாமல் நானில்லை

# ஒரு கரீபிய வீரனின் கர்ஜனை

ஐ.பி.எல் 2023 ஒவ்வொரு போட்டியும் விறுவிறுப்புக்கும் ஆச்சரியத்துக்கும் பஞ்சமில்லாமல் நடந்து கொண்டிருக்கிறது. கணிப்புகள் தலைகீழாக மாறியிருக்கின்றன. கவனம் பெறாத வீரர்கள் கலக்கியிருக்கிறார்கள். போட்டி முடிந்துவிட்டது என நினைக்கையில் ஆட்டம் சூடு பிடித்திருக்கிறது.

இப்படி ஒவ்வொரு போட்டியும் நடந்து கொண்டிருக்க லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகளுக்கு இடையேயான போட்டியும் அதே விறுவிறுப்பு குறையாமல் நடந்து முடிந்திருக்கிறது. பெங்களூர் அணியின் ஹோம் கிரவுண்டான சின்னச்சாமி ஸ்டேடியத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் உற்சாகம், அழுகை, ஏமாற்றம் என கலவையான உணர்வுகளை ரசிகர்களுக்கு வழங்கியிருக்கிறது. இந்தப் போட்டி இரு அணியினருக்கும் ரசிகர்களுக்கும் மறக்க முடியாத போட்டியாக மாறியிருக்கும்.

பெங்களூருவிற்கு எதிரான போட்டியில் 200 சேஸிங்கின் போது லக்னோ அணிக்காக வெறும் 15 பந்துகளில் அரை சதம் அடித்து வெற்றிக்கு மிக முக்கிய காரணமாகியிருக்கிறார் ஆட்டநாயகன் விருதையும் வென்றிருக்கிறார்



நிக்கோலஸ் பூரன். அவரது திறனுக்கேற்ற வகையில் ஐ.பி.எல் தொடரில் இதுவரை பெரிதாகச் சாதித்ததில்லை. அவ்வப்போது ஏதாவது மேஜிக்கல் இன்னிங்ஸை ஆடுவார் அவ்வளவுதான். முன்னதாக பஞ்சாப் அணிக்காக ஆடிக்கொண்டிருந்தவரை சன்ரைசர்ஸ் அணி ரூ.10.75 கோடிக்கு வாங்கியிருந்தது. சன்ரைசர்ஸ் அணிக்காகவும் பெரிதாக ஆடிக் கொடுக்கவில்லை. இதனால் சன்ரைசர்ஸ் அணி இவரைத் தக்கவைக்காமல் விடுவித்தது. ஆனாலும் மினி ஏலத்தில் நிக்கோலஸ் பூரனுக்கான டிமாண்ட் குறையவே இல்லை. ரூ.16 கோடி கொடுத்து லக்னோ அணி அவரை வாங்கியது.

இத்தனை பெரிய தொகையை வாங்கிவிட்டு இந்த சீசனிலும் அவர் எப்படியும் அந்த அணியை ஏமாற்றத்தான் போகிறார் என ரசிகர்கள் சிலர் நிக்கோலஸ்பூரனை ஏற்கெனவே ட்ரால் செய்யவே தொடங்கிவிட்டனர். இந்நிலையில் தான் நிக்கோலஸ்பூரன் இப்போது லக்னோ அணிக்காக அசாத்தியமான ஒரு இன்னிங்ஸை ஆடிக் கொடுத்திருக்கிறார்.

நிக்கோலஸ்பூரன் க்ரீஸுக்குள் வந்த சமயத்தில் லக்னோ அணிக்கு தேவைப்பட்ட ரன்ரேட் 12 க்கும் மேல் இருந்தது. உள்ளே வந்து சிறு தாமதம் கூட இன்றி தன்னுடைய மிஷனைத் தொடங்கினார் பூரன். கர்ன் சர்மாவிற்கு எதிராக அவர் சந்தித்த முதல் பந்தை டாட் ஆக்கியிருந்தார். விக்கெட்டைப் பறிகொடுத்த பந்தைத் தவிர நிக்கோலஸ் பூரன் டாட் ஆக்கியிருந்த மூன்று பந்துகளில் இதுதான் முதல் பந்து. ஆனால், இந்த டாட்டை ஆடிய அடுத்த பந்திலேயே லாங் ஆனில் ஒரு பெரிய சிக்சரை பறக்க விட்டிருந்தார்.

கொஞ்சம் அப்படியே பின் வாங்குவது போல பாவனை காட்டிவிட்டு பாய்ந்து பாய்ந்து சம்பவம் செய்யும் வேட்டை புலியை போலத்தான் பூரன் தெரிந்தார். அந்த 2 ஆவது பந்திலிருந்து எல்லாமே அதிரடிதான். "உயரே பறக்கிறேன்" என ஆகாயத்தில் தான் பந்துகள் இறக்கைக் கட்டி பறந்து கொண்டிருந்தது. பூரனின் இந்த இன்னிங்ஸில் அதிகம் கவனிக்க வேண்டியது அவரின் துணிச்சலும் துடுக்குத்தனமும்தான். எந்த ஒரு பௌலருக்கு எதிராகவும் தயக்கமே இன்றி அதிரடிகளை நிகழ்த்தினார். செட் ஆவதற்கெல்லாம் நேரமும் எடுத்துக் கொள்ளவில்லை.

நேரமே இல்லை என்பது வேறு கதை. ஆனால், சொல்லப்போனால் எந்த ஒரு பௌலருக்கு எதிராகவும் ஒரு 6 பந்துகளை கூட முழுமையாக அவர் எதிர்கொண்டிருக்கவில்லை. கர்ன் சர்மாவிற்கு எதிராக 5 பந்துகளைத் தான் எதிர் கொண்டிருந்தார். 19 ரன்களை அடித்திருந்தார். ஹர்ஷலுக்கு எதிராக 4 பந்துகளைத்தான் எதிர்கொண்டிருந்தார். 17 ரன்களை அடித்திருந்தார். பர்னலுக்கு 4 பந்துகளில் 15 ரன்களையும் வில்லிக்கு எதிராக 2 பந்துகளில் 7 ரன்களையும் அடித்திருந்தார். இந்த நான்கு பௌலர்களுக்கு எதிராகவும் அவரின் ஸ்ட்ரைக் ரேட் 300-400 ஆக இருக்கிறது. மிரட்டல் அடி. சிராஜுக்கு எதிராக மட்டும் தான் கொஞ்சம் சறுக்கினார். சிராஜுக்கு எதிராக 4 பந்துகளில் 4 ரன்களை அடித்து அவரின் பந்திலேயே விக்கெட்டையும் விட்டிருந்தார். சரசர வென நொடிப் பொழுதில் வெடித்துச் சிதறும் 1000 வாலா பட்டாசாகத்தான் இருந்தது பூரனின் இந்த இன்னிங்ஸ்.

19 பந்துகளில் 62 ரன்களை அடித்திருந்தவர் ஆட்டநாயகன் விருதை கையில் ஏந்தியவாறு பேசியவை இங்கே...

"இந்த ஆட்டத்தை என் மனைவிக்காகவும் என் குழந்தைக்காகவும் சமர்ப்பிக்கிறேன். பிட்ச் பட்டிங்கிற்கு பெரிதாக உதவியது. ஸ்டாய்னிஸ் நன்றாக ஆடி சேஸை உயிர்ப்போடு வைத்திருந்தார். கடைசி 4 ஓவர்களில் 50 ரன்களை எடுக்க வேண்டுமானாலும் எங்களால் எடுத்து விட முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. நான் எதிர்கொண்ட இரண்டாவது பந்தையே சிக்சராக்கியிருந்தேன்.

பந்து ஸ்லாட்டில் விழும் பட்சத்தில் அதை உறுதியாக சிக்சராக்கிவிட முடியும் என்கிற நம்பிக்கை எனக்கிருந்தது. ஒரு ஆட்டத்தை நின்று வெற்றிகரமாக முடித்துக் கொடுக்க வேண்டும் என எனக்கு நானே ஒருவித சவாலை உருவாக்கிக் கொண்டு தான் கடந்த சில சீசன்களாக ஆடி வருகிறேன்.

இந்தப் போட்டியையும் இறுதி வரை நின்று முடித்து விட வேண்டும் என நினைத்தேன். ஆனால், துரதிஷ்டவசமாக அவுட் ஆகிவிட்டேன். இந்த சீசன் எனக்கானதாக இருக்கும் என நம்புகிறேன். முகத்தில் புன்னகையோடு மக்களை என் டர்டெயின் செய் யும் வகையில் ஆடி அணிக்காக போட்டிகளையும் வென்று கொடுக்க வேண்டும்" எனப் பூரன் பேசியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணிக்கும் நாளை மதார ஏற்ற மருத்துவர்

## கண்கலங்க வைக்கும் பதிவு

அவர் மார்ச் 27 ஆம் திகதி இறந்து விடுவார் என மருத்துவர்கள் நாள் குறித்தனர். மரணம் தன் கண்முன்னே இருப்பதை உணர்ந்த அவர், நான் நலமாக விடை பெறுகிறேன் என பெற்றோரை நம்பவைத்து, தன் குடும்பத்தினரை மன ரீதியாகத் தயார் செய்துள்ளார்.

தான் உயிரிழக்க உள்ளதை அறிந்த மருத்துவர் ஒருவர், தனக்கு பிறகு குடும்பத்தினர் எந்தச் சிரமமும் படக்கூடாது என்பதற்காக அனைத்து முன் ஏற்பாடுகளையும் செய்து விட்டு இறந்த சம்பவம் அனைவரையும் கலங்கச் செய்துள்ளது.

மரணம் வந்தால் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் நடுங்குவார்கள். ஆனால் தெல்ங்கானாவைச் சேர்ந்த ஹர்ஷவர் தன் என்ற மருத்துவர், தன் மரணத்தை முன்பே அறிந்து அதனால் தன் மனைவி மற்றும் குடும்பத்தினர் யாரும் வேதனைப்படக் கூடாது என்பதற்காக, அனைத்து முன் ஏற்பாடுகளையும் செய்து விட்டு இறந்துள்ளார்.

தெலங்கானா மாநிலம் கம்மம் பகுதியைச் சேர்ந்தவர் யெபுரி ஹர்ஷவர்தன். இவர் அவுஸ்திரேலியாவில் பொது மருத்துவராகப் பணி செய்து வந்துள்ளார். கடந்த 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இவருக்கும், சிந்து என்ற பெண்ணுக்கும் திருமணம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அதே மாதம் ஹர்ஷவர்தன் அவுஸ்திரேலியா புறப்பட்டு சென்றுள்ளார். அங்கு சென்ற பிறகு, தன் மனைவியும் வெளிநாடு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளைச் செய்து விட்டு அழைத்துச் செல்வதாகத் தெரிவித்துள்ளார்.



இந்நிலையில், 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திடீரென ரத்த வாந்தி எடுத்த ஹர்ஷவர்தன், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதன் பின்னர் நடந்த சோதனையில் அவருக்கு நுரையீரல் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இது பற்றி தன் பெற்றோருக்குத் தகவல் தெரிவித்து விட்டு அங்கேயே சிகிச்சை எடுத்துக் கொள்வதாகக் கூறியுள்ளார். ஆனால் இதை மறுத்த அவருடைய பெற்றோர், இந்தியா வந்துவிட்டால் இங்கு நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், இங்கேயே சிகிச்சை செய்து கொள்ளலாம் என வற்புறுத்தியுள்ளனர். ஆனால் தான் ஏற்கெனவே புற்றுநோயின் நான்காம் நிலைக்குச் சென்றதை அறிந்த ஹர்ஷவர்தன், அவுஸ்திரேலியாவில் சிகிச்சை சிறப்பாக இருக்கும். விரைவில் குணமடைந்து விடலாம். அதனால் அங்கேயே தான் இருப்பதாகக் கூறி சமாளித்துள்ளார்.

புற்றுநோயால் தான் அனுபவிக்கும் வேதனைகளை தன் பெற்றோர், மனைவி ஆகியோர் பார்க்கக்கூடாது என்பதற்காக, இவர்களையும் அவுஸ்திரேலியாவுக்கு வர வேண்டாம் எனவும் தடுத்துள்ளார். இரண்டு வருட சிகிச்சைக்குப் பின்னர் கடந்த எட்டு மாதங்களாக அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. மார்ச் 27 ஆம் திகதி அவர் இறந்துவிடுவார் என்றும் மருத்துவர்கள் நாள் குறித்துள்ளனர். மரணம் தன் கண்முன்னே இருப்பதையும் தனக்கான நாட்களை எண்ணிக் கொண்டிருப்பதையும் உணர்ந்த அவர், நான் நலமாக விடைபெறுகிறேன் என பெற்றோரை நம்பவைத்து, தான் அனுபவித்த நோயின் இறுதி முடிவுக்கு தன் குடும்பத்தினரை மனரீதியாகத் தயார் செய்துள்ளார்.

அவரது மரணத்துக்கு பிறகு இளம் வயதிலேயே தன் ம்னைவி விதவையாவதை விரும்பாமல், குடும்ப உறுப்பினர்களையும் மனைவியையும் சம்மதிக்க வைத்து இருவரும் விவாகரத்து பெற்றுவிட்டனர்.

மேலும் மனைவி பொருளாதார ரீதியாக நலமாக இருக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளார் ஹர்ஷவர்தன். இதுமட்டுமல்லாமல், தனக்காக ஒரு சவப்பெட்டியையும் வாங்கி அனைத்தையும் தயார் செய்து விட்டார்"

மார்ச் 24 ஆம் திகதி காலையில் தன் நண்பர்களுடன் காலை உணவு அருந்த விரும்பிய ஹர்ஷவர்தன், இன்னும் ஒரு சில மணி நேரங்களில் தான் உயிரிழக்கவுள்ளதாகவும் நண்பர்களிடம் கூறியுள்ளார். அவர் சொன்னது போலவே அந்த துர்திர்ஷ்டமான நாளில் ஹர்ஷவர்தனின் உயிர் பிரிந்துள்ளது.

ஹர்ஷவர்தனின் வாழ்க்கை மற்றும் குடும்ப உறுப்பினர்களால் விபரிக்கப்பட்ட அவரது இறுதி நேரம் ஆகியவை சமூகவலைத்தளங்களில் பரவி, படிப்பவர்கள் மனங்களை கனக்க வைத்து வருகிறது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2809

### அஸ்ரின்

பணமில்லாத நேரத்திலும் நம்மோடு பயணிப்பவர்களே உண்மையான பாசம் உள்ளவர்கள்!



### பரீனா



பழகிய மிருகங்களிடம் இருக்கும் பாசம் கூட பழகிய மனிதர்களிடம் இருப்பதில்லை

### ரஞ்சன்

ஒருத்தன் பொய் சொல்கிறான் என்று தெரிந்த பின்னும் அவனிடம் "ஏன் பொய் சொன்னாய்" என்று கேட்பது முட்டாள்தனம் ஏனெனில் அவன் அதற்கும் பொய்தான் சொல்வான்



### சயானா

பார்க்கும் சொந்தமெல்லாம் பாசமாய் தெரிந்தாலும் பழகிப் பார் அதிலும் பாதி வேசம் தான் என்று புரியும்...!!!

### றியாஸ்

கடந்து வந்த படிகளை உடைக்காதீர்கள் ஒருவேளை இறங்குவதற்கு அதே படிகள் தேவைப்படலாம்

விதி வலியது! காலம் கொடியது!



### தாட்சா



எவரிடம் அளவிற்கு அதிகமாக தவறுகள் உள்ளதோ அவரே மற்றவர் மீது தேவையற்ற வீண்பழிகளை சுமத்தி தன்னை உத்தமர் போல் காட்டிக் கொள்வார்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2023 - 13.04.2024

## நினைத்த காரியங்கள் நினைத்தபடி நிறைவேறும்!

### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



அருகில் இருப்பவர்களும் ஆன ந்தமாக வாழ விரும்பும் ரிஷப இராசி வாசகர்களே!




எந்த ஒரு செயலை ஒப்படைத்தாலும் எப்பாடுபட்டாவது முடித்துவிடும் ஆற்றல் பெற்ற உங்களுக்கு, சோப கிருது புத்தாண்டு தொழிலில் முன்னேற்றத்தை வழங்கும் ஆண்டாக அமையப் போகின்றது. ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம் தான்.

அதுமட்டுமல்லாமல் லாபஸ்தானத்தில் குரு சொந்த வீட்டிலும், தொழில் ஸ்தானத்தில் சனிபகவான் தன் சொந்த வீடான கும்பத்திலும் சஞ்சரிக்கின்றார்கள். குறிப்பாக தொழில், லாப ஸ்தாணங்கள் பலம் பெற்று இருப்பதால் தொழில் வளர்ச்சியும், லாபமும் திருப்தி தரும் விதம் அமையும். தொடக்கத்தில் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் வியாழன் 22.4.2023 அன்று உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமான விரயஸ்தானத்திற்கு வருகின்றார். இடையில் வக்ரமும் பெறுகின்றார். சனி பகவான் வருடத் தொடக்கத்தில் கும்ப இராசியில் சஞ்சரிக்கின்றார். இடையில் கும்பத்தில் வக்ரம் பெறுவதோடு, 24.8.2023 இல் மகர இராசிக்கும் வக்கிர இயக்கத்தில் வருகின்றார். அங்கிருந்து 20.12. 2023 இல் மீண்டும் கும்ப இராசிக்கு சனிப் பெயர்ச்சியாகின்றார். இடையில் மூன்று முறை சனி, செவ்வாயின் பார்வையும் ஏற்படுகின்றது.

உங்கள் இராசிக்கு சப்தம விரயாதிபதி செவ்வாய் என்பதால் இக் காலத்தில் குடும்பப் பிரச்சினை அதிகரிக்கலாம். வியாபாரத்திலும், உத்தியோகத்திலும் குறுக்கீடுகள் ஏற்படும். ஆடம்பரச் செலவுகளால் கையிருப்புகள் கரையும். 8.10.2023 இல் உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான லாப ஸ்தானத்திற்கு ராகுவும், 5 ஆம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு கேதுவும் வருகின்றனர். இந்த மாற்றங்களின் அடிப்படையில் தான் இந்த ஆண்டு முழுவதும் உங்களுக்குப் பலன்கள் அமையும்.

உங்கள் சுய ஜாதகத்தில் வலிமை வாய்ந்த திசாபுத்திகள் நடைபெற்றால் நினைத்த காரியங்கள் நினைத்தபடி நிறைவேறும். திசாபுத்தி பலம் இழந்திருந்தால் செய்யும் காரியங்களில் சில தடுமாற்றங்கள் ஏற்படும். குடும்பத்தில் பிரச்சினைகள், ஆரோக்கியத் தொல்லைகள் காரணமாக அதிகம் செலவிடும் சூழ்நிலையும் அமையும். அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால் பாக்கியாதிபதிக்குரிய தெய்வத்தை தேர்ந்தெடுத்து யோகபலம் பெற்ற நாளில் வழிபட்டு வருவது நல்லது.

#### குருப்பெயர்ச்சி!

சித்திரை 9 ஆம் திகதி மேஷ இராசிக்கு குரு பகவான் வருகின்றார். உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்திற்கு வரும் குரு பகவானின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகின்றது. விரய ஸ்தானத்திற்கு குரு வந்தாலும் கவலைப்பட வேண்டாம். உங்கள் இராசிக்கு அஷ்டம லாபாதிபதியான குரு 12 ஆம் இடத்திற்கு வரும் பொழுது சில நன்மைகளை உடனடியாக வழங்கும்.

காலங்காலமாகக் காத்திருந்தும் நடைபெறாத சுபகாரியங்கள் இப்பொழுது ஞாலம் போற்றும் விதம் நடைபெறப் போகின்றது. குருவின் பார்வை பலனால் தாய்வழி ஆதரவு திருப்தி தரும். வாகனம் வாங்கி மகிழ்வது சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து படைத்தவர்களின் நட்பால், தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியலாம். தொழிலில் மட்டுமல்ல உத்தியோகத்திலும் உங்களுக்கு எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். பரிசீலனையில் இருந்த பதவி உயர்வு தானாக வரலாம்.

அதிகாரிகள் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வர். மறைமுக எதிர்ப்புகள் மாறும். ஆரோக்கியம் சீராக உடனுக்குடன் உடல்நலத்தை சரி பார்த்துக் கொள்ளுங்கள். வாங்கிய சொத்துக்களால் லாபமும், தேங்கிய காரியங்கள் துரிதமாக நடைபெறும் யோகமும் இக் காலத்தில் ஏற்படும். எதையும் திட்டமிட்டுச் செய்து வெற்றி காண்பீர்கள்.

#### கும்பச்சனி

ஆண்டின் தொடக்கம் முதல் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில் சனி பகவான் சஞ்சரிக்கின்றார். அவர் தன் சொந்த வீடான கும்பத்தில் சஞ்சரிப்பதால் இனி நடக்கும் காரியங்கள் எல்லாம் இனிதாகவே நடைபெறும். பணி ஓய்விற்குப் பிறகும் சிலருக்குப் பணிபுரிய வாய்ப்புக் கிடைக்கும். திசாபுத்தி பலம் பெற்றவர்கள் உத்தியோகத்திலிருந்து விருப்பு ஓய்வு பெற்று, சுய தொழில் செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும்.

பிள்ளைகளுக்குப் பெரிய இடத்தில் இருந்து வரன்கள் வரலாம். பொது வாழ்வில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைக்கும். கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி இடையில் வக்கிரம் பெறுகிறார்.

24.8.2023 முதல் மகரத்திற்கு வந்தும் வக்கிரம் அடைகின்றார். அங்கிருந்து மீண்டும் 20.12.2023 இல் கும்ப இராசிக்கு முறையாகப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார்.

மகரத்தில் சஞ்சரிக்கும் பொழுது பாக்கிய ஸ்தானம் பலம் பெறுகின்றது. எனவே, அரைகுறையாக நின்ற பணிகள் இனித்தொடரும். கூட்டு முயற்சி வெற்றியடையும். குடியிருக்கும் வீட்டாலும், கட்டிய வீட்டாலும் வந்த பிரச்சினைகள் கொஞ்சம், கொஞ்சமாக மாறும்.

படிப்படியாக உயர்ந்து பார் போற்றும் விதம் வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள். இல்லம் தேடி சுபச் செய்திகள் வந்த வண்ணமாக இருக்கும்.

#### இராகு-கேது பெயர்ச்சி

8.10.2023 அன்று மீன இராசியில் இராகுவும், கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். 11 ஆம் இடத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கப்போவதால் லாப ஸ்தானம் பலம் பெறுகின்றது. எனவே சேமிப்பு உயரவும், சிறப்பான வாழ்க்கை அமையுவும் வழிபிறக்கப் போகின்றது. "தொழிலை எப்படி விரிவு படுத்துவது?" என்று நினைத்திருந்த உங்களுக்கு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். மூத்த சகோதரத்தால் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வு, உதிரி வருமானங்கள் பெருகும். அதிகாரிகளால் ஏற்பட்ட அல்லல் அகலும். மேலும் ராகு பகவான் யோகங்களை வழங்க யோக பலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்தால் அற்புதப் பலன்கள் வந்து சேரும்.

கேதுவின் ஆதிக்கத்தால் குழந்தைச் செல்வங்களின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடியிருக்கும் வீட்டை ஒரு சிலர் விலைக்கு வாங்க முன்வருவர். அண்ணன்-தம்பிகளுக்குள் இருந்த அரசல், புரசல்கள் மாறும். பூர்வீக சொத்துக்களை பாகப் பிரிவினை செய்து கொள்வதில் தீவிரம் காட்டுவீர்கள். முன்னோர்கள் செய்து வைத்த முக்கியத் திருப்பணிகளை மீண்டும் செய்ய முன் வருவீர்கள்.

#### பெண்களுக்கான பலன்கள்!

புத்தாண்டு உங்களுக்கு வளர்ச்சி தரும் ஆண்டாக அமையப் போகின்றது. வருமானம் உயரும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். தாய்வழி ஆதரவும், உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பும் திருப்தி தரும். கணவன்-மனைவிக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து செயல்படுவதன் மூலம் இல்லறத்தை நல்லறமாக அமைத்துக் கொள்வீர்கள். சனியின் வக்ர காலத்தில் கூடுதல் நிதானத்தோடு செயற்பட வேண்டும். கூட்டாளிகள் விலகலாம். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காது. ராகு-கேது பெயர்ச்சி நன்மை தரும். வெளிநாட்டு முயற்சியிலும் அனுகூலம் கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாண முயற்சி கைகூடும்.

#### குரு-சனியின் வக்கிரம்

12.9.2023 முதல் 20.12.2023 வரை மேஷத்தில் குரு வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் தொழில் கூட்டாளிகளின் அனுசரிப்பு குறையும். இடமாற்றங்கள் இனிமை தராது. வெளிநாட்டில் பணிபுரியச் சென்றவர்கள் அங்கு வேலை கிடைக்காமல் திரும்பலாம். அசையா சொத்துக்கள் வாங்கி அழகுபார்த்தவர்கள் அதை விற்க நேரிடலாம். அஷ்டமாதிபதியாகவும் குரு விளங்குவதால் ஒரு சில நன்மைகளும் ஏற்படும். சங்கிலித் தொடர்போல வந்த கடன் சுமை ஓரளவு குறையும். உத்தியோகத்தில் சகப் பணியாளர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். ஆகாரக் கட்டுப்பாட்டின் மூலமாக ஆரோக்கியம் சீராக வழிபிறக்கும். 27.6.2023 முதல் 23.8.2023 வரை கும்ப இராசியிலும், பிறகு 24.8.2023 முதல் 23.10.2023 வரை மகரத்திலும் சனிபகவான் வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் தொழில் வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படலாம். எதிரிகளின் பலம் மேலோங்கும். புதியவர்களை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்க வேண்டாம். உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வும், சலுகைகளும் சகப் பணியாளர்களுக்குப் போய்ச் சேரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிக்காக அரசியல் நடத்தவில்லை-டிலான்

(கொழும்பு)

பதவிகளுக்காக அரசியல் நடத்தவில்லை என்றும் ஆனால் அன்று டலஸ் அழகப்பெருமவின் பெயர் முன்மொழியப்படாமல் இருந்திருந்தால் இன்று ஜி.எல். பீரிஸே பிரதமாக இருந்திருப்பார் என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

தமது அணியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிகளுக்காக அரசியல் நடத்துவது கிடையாது என்றும் கொள்கை அரசியலையே முன்னெடுப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பதவிகள் தேவையில்லை என்று தீர்மானித்த பின்னரே மொட்டுக் கட்சியில் இருந்து வெளியேறியதாகவும் குறிப்பிட்ட டிலான் பெரேரா. பேராசிரியர் ஜி.எல். பீரிசுக்கு பிரதமர் பதவி வழங்கப்படும் எனக் கூறப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்வுக்கான வாக்கெடுப்பின் போது டலஸின் பெயரை அவர் முன்மொழியாமல் இருந்திருந்தால் தற்போது பீரிஸ்தான் பிரதம என்றும் டிலான் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (4)

# கறவை மாடுகள் திருட்டு விசாரணைகள் ஆரம்பம்

## விவசாய அமைச்சு

(கொழும்பு)

கறவை மாடுகள் திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களில் இருந்து பல முறைப்பாடுகள் பதிவாகியுள்ளமை தொடர்பாக விவசாய அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

கறவை மாடுகளை திருடி இறைச்சிக்காக படுகொலை செய்யும் கும்பல் பற்றிய தகவல் வெளியாகியுள்ளதுடன், கறவை மாடுகள் திருடப்படுவதும் அதிகரித்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் மாகாண மற்றும் மாவட்ட விவசாய அதிகாரிகள் அமைச்சரிடம் இந்த விடயத்தை முன்வைத்துள்ளனர்.

இதனால் கறவை மாடுகளை பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு கமராக்கள் மற்றும் சங்கிலிகளை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என விவசாய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாளொன்றுக்கு 20 முதல் 30 லீற்றர் வரை பால் கறக்கக் கூடிய கறவை மாடுகள் இவ்வாறு திருடப்பட்டுள்ள நிலையில் மாடு திருடியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (4)

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மதுபான விற்பனை அமோகம்

(கொழும்பு)

நாட்டில் மதுபான விற்பனை அதிகரித்துள்ளதாக மதுவரித் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

விலை அதிகரிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளினால் மதுபான விற்பனை 40 வீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

எனினும் தமிழ் சிங்கள புத்தாண்டு காலத்தில் மதுபான விற்பனை 20 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் மதுபான விற்பனை உயர்வடைந்துள்ளது.

மதுபான வகைகளின் விலையைக் குறைப்பதற்கு வரியில் மாற்றத்தை கொண்டு வருமாறு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

மதுபான விற்பனை வீழ்ச்சியடைந்த காரணத்தினால் பெருந்தொகை எதனோல் களஞ்சியப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (4)

# 14 ரயில் சேவைகள் ஒரேநாளில் ரத்து

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்கள் சேவைக்கு சமுகமளிக்காத காரணத்தினால் நேற்று முன்தினம் சுமார் 14 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவற்றில் 12 குறுகிய தூர ரயில்கள் நேற்று முன்தினம் காலை முதல் இயங்க திட்டமிடப்பட்டது.

இருப்பினும், போதிய பணியாளர்கள் இல்லாமையால் ரயில்கள் இரத்து செய்யப்பட்டதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (4)

# பண்டிகையின் பின்னரும் பாதுகாப்பு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தின் பின்னரும், பொதுமக்களின் பாதுகாப்பு கருதி. பொலிஸாரும் புலனாய்வு பிரிவினரும், தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுவதாக காவல்துறை பேச்சாளர். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வதற்காக, பொலிஸ் தொடர்ந்தும் சோதனையில் ஈடுபடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் தமது சொந்த வாகனங்களில் பயணிக்கும் போது. அவதானத்துடன் செல்ல வேண்டும்.மதுபோதையில் வாகனம் செலுத்துவதைத் தவிர்ப்பதுடன், வீதி விதிமுறைகளை உரியவாறு பின்பற்ற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (4)

# கொழும்பு செல்வதற்கு விசேட போக்குவரத்து

(கொழும்பு)

புத்தாண்டை முன்னிட்டு, சொந்த ஊர்களுக்கு சென்ற பொதுமக்கள், மீண்டும் கொழும்புக்கு திரும்புவதற்கு சில விசேட ரயில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளை 17 ஆம் திகதி வரை குறித்த விசேட ரயில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பிரதி போக்குவரத்து அதிகாரி என்.ஜே. இந்தி பொலகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விசேட பேருந்துகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக, இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து வெளி பிரதேசங்களுக்கு செல்வதற்காகவும் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது. (4)

# தங்கத்தின் விலையில் மாற்றம்



(கொழும்பு)

நாட்டில் நாளாந்தம் நிகழும் பொருளாதார மாற்றத்தின் காரணமாக தங்கத்தின் விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில், 24 கரட் தங்கப் பவுண் ஒன்று நேற்று 182,400 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அதேபோல 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 167,200 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. (4)

# ஆணின் சடலம் மீட்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்டம் - அலஸ்தோட்டம் கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை வீட்டிலிருந்து சென்ற நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அலஸ்தோட்டம் கடற்கரையில் மீட்கப்பட்ட சடலத்தை திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதிவான் பார்வையிட்டதையடுத்து பிரேத பரிசோதனைக்காக பொது வைத்திய சாலைக்கு சடலத்தை கொண்டு செல்லுமாறும் பொலிஸாருக்கு கட்டளையிட்டார்.

இதனையடுத்து சடலத்தை கொண்டு சென்று பிரேத பரிசோதனை முடிவுற்ற. பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் மரணம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர். (4)

# கிணற்றில் விழுந்து சிறுவன் உயிரிழப்பு

(கொழும்பு)

கஹட்டகஸ்திகிலிய நெகுடவெவ பிரதேசத்தில் பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி விழுந்து சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த 16 வயதுடைய சிறுவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டிற்கு அருகில் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது பாதுகாப்பற்ற கிணற்றில் தண்ணீர் நிறைந்திருந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் கஹட்டகஸ்திகிலிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (4)


**மணமகள் தேவை**

1990.இந்து.கேட்டை. Doctor (Australia),தெல்லிப்பளை.பதிவு #8747.No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.www.EQMarriageService.com அழையுங்கள் 076 664 9401. (சி-1980)

**மணமகள் தேவை**

1992.இந்து.சித்திரை. Doctor (Australia),காரைநகர்.பதிவு #8778.No Broker-Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.www.EQMarriageService.com அழையுங்கள் 076 664 9401. (சி-1980)

**மணமகன் தேவை**

1989.கிறிஸ்தவம். Doctor, யாழ்ப்பாணம்.பதிவு #8181.No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.www.EQMarriage Service.com அழையுங்கள் 076 664 9401. (சி-1979)

**மணமகன் தேவை**

1992 ,இந்து கேட்டை. Doctor, கரவெட்டி .பதிவு #8266 .No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.www.EQMarriage Service.com அழையுங்கள் 076 664 9401. (சி-1979)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல் 338

வலம்புரியின் மருத்துவச்சுடர்


# எந்த எண்ணெய் பாதுகாப்பானது?

சமையலுக்குபாவிக்கப்படும்எண்ணெய் வகைகளில் எது பாதுகாப்பானது என்பது சம்பந்தமான புரிதலில் ஒரு பெரும் குழப்பநிலை காணப்படுகிறது.

நல்லெண்ணெய் நல்ல எண்ணெயா தேங்காய் எண்ணெயை பாவிக்கலாமா? ஒருமுறை பொரித்த எண்ணெயைவெளியே ஊற்றுவதா? இது கட்டுப்படியாகுமா? உடல் நிறையை குறைப்பதற்கு எந்த எண்ணெய் பொருத்தமானது. மீன் எண்ணெய் குளிசைகளை பாவிப்பது பயன்தருமா? தாவரக்கொழுப்பு, விலங்கு கொழுப்பு என்பவற்றின் வேறுபாடுகள் என்ன? என்பது சம்பந்தமான ஒரு தெளிவு பயனுடையதாக அமையும்.

பொதுவாக எல்லா வகையான எண்ணெய்களையும் அளவுடன் பாவிப்பது பாதுகாப்பானது. எண்ணெய் சேர்த்து வதக்கி எடுக்கும் சமையலுக்கு நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் என்பன சிறந்தவை.

ஆனால்வடை,றோல்ஸ்,பற்றீஸ் போன்ற பொரித்தெடுக்கும் உணவுகளை தயாரிப்பதற்கு இந்த எண்ணெய் வகைகள் சிறந்தவை அல்ல.இந்த எண்ணெய் வகைகளை கொதிக்க வைக்கும் பொழுது அவை 'ராண்ஸ்' கொழுப்பாக மாற்றமடைகின்றன. இந்த 'ராண்ஸ்' கொழுப்பு உடல் நலத்துக்கு பாதுகாப்பானது அல்ல.




பொரித்து எடுக்கும் இந்த உணவு வகைகளைதயாரிப்பதற்குதேங்காய் எண்ணெய் சிறந்தது. தேங்காய் எண்ணெயை கொதிக்கவைக்கும் பொழு தும் அது 'ராண்ஸ்' கொழுப்பாக மாற்றமடையாது.இதனால் பொரித்த தேங்காய் எண்ணெயை 2ஆம் 3ஆம் முறை பொரிப்பதற்கு பாவிப்பதும் பெரிய பாதிப்பு எதனையும் ஏற்படுத்த மாட்டாது.

இதனால் ஒரு தடவை பொரித்த தேங்காய் எண்ணெயை வெளியே ஊற்றவேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் போன்றவற்றை பொரிப்பதற்கு மீண்டும் மீண்டும் பாவிப்பது பாதுகாப்பானது அல்ல. அனைத்து எண்ணெய் வகைகளுக்கும் உடல்நிறையை அதிகரிக்கும் தன்மை காணப்படுகிறது.

எனவே உடல்நிறையை குறைக்க விரும்வோர் அனைத்து வகையான எண்ணெய்களையும் குறைத்துக் கொள்வது நல்லது.

பொதுவாக விலங்கு கொழுப்புடன் ஒப்பிடும்பொழுது தாவரக்கொழுப்புகள் பாதுகாப்பானவை என ஆராய்ச்சிகள் உறுதி செய்கின்றன.

உடல்நலத்தை மேம்படுத்துவதற்கு மீன்எண்ணெய் குளிசை வகைகளோ அல்லது ஒமேகா-3 வகை குளிசைகளோ பெரிய அளவில் உதவப் போவதில்லை என்றும் ஆராய்ச்சிகள் தெளிவு படுத்தி நிற்கின்றன.

எனவே அதிகவிலை கொடுத்து இந்த வகையான குளிசைகளை வாங்கி பயன்படுத்துவது பயனற்றது .

இறக்குமதியாகி அதிக விலையில் விற்பனையாகும் மரக்கறிஎண் ணெய் வகைகளிலும் பார்க்க எமது பகுதியில் உற்பத்தியாகும்தேங்காய் எண்ணெய் பாதுகாப்பானது.

உலகளாவிய அளவில் பயிரிடப்படும் சூரியகாந்தி செடிகளிலிருந்து இவ்வளவு பெருந்தொகையான சூரிய காந்தி எண்ணெயை உற்பத்தி செய்வது நடைமுறைச் சாத்தியமானது அல்ல.

உலகளாவிய அளவிலே பயிரிடப்படும் சூரியகாந்தி பயிர்களை கருத்தில் கொண்டால் அவற்றிலிருந்து பெறப்படக்கூடிய எண்ணெய் தற்பொழுது சூரியகாந்தி எண்ணெய் என்று சொல்லி விற்பனையாகும் எண்ணெயின் காற்பங்கு எண்ணெயை கூட உற்பத்தி செய்வது நடைமுறைச் சாத்தியமானது அல்ல.

எனவே இங்கு விற்பனையாகும் சூரியகாந்தி எண்ணெய் வகைகளின் தூய்மைத் தன்மை நிச்சயமற்றதாக காணப்படுகிறது.எண்ணெயை ஊற்றி வதக்கி எடுத்து பிரட்டும் உணவு வகைகளிலே பொரித்து வடித்து எடுக்கும் உணவு வகைகளிலும் பார்க்க எண்ணெய்செறிவு அதிகமாக காணப்படுகிறது.

குறைந்தளவு எண்ணெயை பாவித்து சுவையான உணவு வகைகளை தயாரிக்கும் முறைகளை அறிந்திருப்பது பயனுடையதாக அமையும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

# ஒட்சிசனை உருவாக்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலை

பசுமையான மரங்கள் ஒவ்வொன்றும் நித்தமும் பல்லாயிரக்கணக்கான லீற்றர் ஈரலிப்பான ஒட்சிசனை உருவாக்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளாக விளங்குகின்றன.

அத்துடன் நாம் வெளி விடும் அசுத்தக் காற்றை உள்ளெடுத்து சுத்திகரிக்கும் வடிகட்டிகளாகவும் தொழிற்படுகின்றன. சுற்றாடலின் வெப்பநிலையைக் குறைத்து சூழல் வெப்பநிலையை மனிதன் சுகமாக வாழக்கூடிய ஒரு வெப்பநிலையில் சீர் செய்து வைக்கும் ஒரு வெப்பநிலை சீராக்கியாகவும் இந்த மரங்கள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தாவரங்களில் துளிர்த்து வரும் குருத்துக்களும், பசுமையும், குளிர்ச்சியும், நிழலும் அதன் மலர்களும் மனித மனங்களுக்கு புத்துணர்ச்சியையும் அமைதியையும் அள்ளி வழங்குகின்றன. மாதம் மும்மாரி பொழியாவிட்டாலும் போதுமான அளவு மழை வீழ்ச்சிகிடைப்பதற்கும் எமது தண்ணீர்த் தேவையை நிவர்த்திப்பதற்கும் மரங்கள் இன்றியமையாதவை என்பதும் மரம் இன்றி மழை இல்லை என்பதும் எமக்குத் தெரியும். எமக்கு உணவுப் பொருட்களையும் ,வருவாயையும் தரும் தாவரங்கள் தான் பயனுள்ள தாவரங்கள் என்று எண்ணிக்கொள்கிறோம்.

அனைத்து தாவரங்களுமே பயனுள்ள அட்சயபாத்திரங்கள் என்பதை மறந்து விடுகின்றோம். நாம் வெட்டி வீழ்த்திய ஒவ்வொரு மரங்களுக்காகவும் வேதனைப்படுவோம்.அதற்கு பிராயச்சித்தமாக வீழ்த்திய ஒவ்வொரு மரங்களுக்கு பதிலாகவும் 9 மரங்கள்நட்டு வளர்ப்போம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கென்று ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ளும்

– எமர்சன்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# விடைத்தாள்களைத் திருத்தி மாணவர்களுக்கு உதவுங்கள்

2022ஆம் ஆண்டின் க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

விடைத்தாள்களை திருத்துவதற்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் மின்சாரக் கட்டணத்தைக் குறைத்தல், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான வருமான வரியை நீக்குதல் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து விடைத்தாள்களைத் திருத்தும் பணி கிடப்பில் போடப்பட்டுள்ளது.

ஏலவே கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் காலம் கடந்து செல்கின்றன.

இதற்கு மேலாக, நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட, பாடசாலைகள் இயங்க முடியாத சூழ்நிலை உருவாகியிருந்தது.

இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படலாயிற்று.

இந்தநிலையில் குறித்த கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடு அடுத்த கல்வியாண்டின் இடைப்பகுதியில் நிறைவடைகின்ற நிலைமை உள்ளது.

இதனால் பொதுப் பரீட்சைகள் காலம் கடந்து நடத்தப்படுகின்றன.

உதாரணத்துக்கு 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் க.பொ.த (சா) தரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மாணவர்கள் இன்னமும் அந்தப் பரீட்சைக்குத் தோற்றமுடியவில்லை.

2023 மே மாத நடுப்பகுதியில் சாதாரண தரப் பரீட்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்ட போதிலும் அதுவும் பிற்போடப்பட்டு மே இறுதிப் பகுதியில் பரீட்சை இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சாதாரண தரப் பரீட்சையைப் பிற்போடுவதற்கான காரணங்களில் முக்கியமானவை உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் இன்னமும் திருத்தப்படாமல் இருப்பதாகும்.

இவ்வாறு உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப்படாமல் இருப்பதன் காரணமாக, அந்தப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பரீட்சையில் சித்தியடைவேனா? அல்லது மீளவும் பரீட்சையில் தோற்றுவதற்காகப் படிக்க வேண்டுமா? என்ற கேள்விகளுக்கான பதில் பரீட்சைப் பெறுபேற்றிலேயே தங்கியுள்ளது.

இந்நிலையில் விடைத்தாள்களைத் திருத்தும் பணி இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை எனும்போது அந்த மாணவர்கள் என்னதான் செய்ய முடியும்.

இவை ஒருபுறமிருக்க, உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி நடைபெறாததன் காரணமாக,

க.பொ.த (சா) தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் மாணவர்கள் காத்திருக்கின்றனர்.

இஃதானது இயந்திர வேகத்தில் இயங்குகின்ற இந்த உலகத்தில் எங்கள் பிள்ளைகளை – மாணவர்களை நாங்களே இழுத்து விழுத்துவதாக நிலைமை அமைகிறது.

ஆகையால் விடைத்தாள் திருத்தும் பணியை கல்விப் புலத்தினர் மேற்கொண்டு எங்கள் மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# இலங்கையிலுள்ள குரங்கொன்றிற்கு 50 ஆயிரம் ரூபா சீனா செலவு செய்கின்றது

## விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

இலங்கையிலுள்ள குரங்கொன்றிற்காக சுமார் 30 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரையில் சீன அரசாங்கம் செலவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக விவசாயத் துறை அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை குரங்குகளை சீனாவுக்கு கொண்டு சென்று இறைச்சிக்காக பயன்படுத்தப் போவதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானது என்றும் விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

சீனாவிலுள்ள மிருகக்காட்சிசாலைகளுக்கு கொண்டு செல்லும் வகையிலேயே சீனாவினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக தெரிவித்த அமைச்சர் இலங்கையிலுள்ள குரங்கொன்றை பிடிப்பதற்கும், அதனை சீனாவிற்கு கொண்டு செல்வது வரையான அனைத்து செலவீனங்களையும் சீனாவே ஏற்றுக்கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், குரங்குகளை பிடித்து, அதனை தனிமைப்படுத்தி, நோய்கள் ஏதேனும் காணப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராய்ந்து, கூடுகளில் அடைத்து, சீனாவிற்கு கொண்டு செல்வதற்கான முழு செலவீனத்தையும் சீனாவே ஏற்றுக் கொண்டுள்ளதாக அவர் விளக்கம் அளித்துள்ளார்.

இலங்கையிலிருந்து குரங்குகளை 50 ஆயிரம் ரூபா செலவளித்து சீனாவிற்கு கொண்டு சென்று, அந்த குரங்கை இறைச்சிக்காக பயன்படுத்துவார்களாயின் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் லாபம் வைத்து ஒரு லட்சம் ரூபாவிற்கே விற்க வேண்டிய நிலை ஏற்படும் என குறிப்பிட்ட அவர் ஒரு லட்சம் ரூபாவை செலவிட்டு, குரங்குகளை சீனர்கள் உட்கொள்ளமாட்டார்கள் என்றும் சுட்டிக் காட்டினார். (ம-7,9)

# பொலன்னறுவையில் விபத்து இருவர் பலி

(பொலன்னறுவை)

லொறி ஒன்றும் உழவு இயந்திரம் ஒன்றும் மோதிய விபத்தில் இருபெண்கள் உயிரிழந்துள்ளதுடன் 8 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலன்னறுவை, ஓனேகம வீதியின் வலேகடே சந்தியில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்ற போது உழவு இயந்திரத்தில் சுமார் 10 பேர் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,9)

# மத உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்

## பண்ணையில் அமைக்கப்பட்ட அம்மன் சிலை தொடர்பில் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

சக மதங்களை பாதிக்காத வகையில் ஒவ்வொருவருடைய மத உணர்வுகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பண்ணை சுற்று வட்டத்தில் அமைக்கப்பட்ட நயினாதீவு நாகபூசணி அம்மனின் சிலையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டார்.

பண்ணை பகுதியில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று விட்டே குறித்த சிலையை அமைச்சர் பார்வையிட்டார்.

நாகபூசணி அம்மனின் சிலை வியாழக்கிழமை இரவு வைக்கப்பட்டுள்ள நிலையில், அம்மனின் சிலைக்கு மறுநாள் வெள்ளிக்கிழமை உருத்திர சேனை அமைப்பால் அபிஷேகம் மேற்கொள்ளப் பட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் இந்த நாட்டில் அனைத்து தரப்பும் சுதந்திரமாக வழிபடுவதற்கான நிலைமை காணப்படுகின்றது. ஒவ்வொருவருடைய மத உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கப்பட வேண்டும் என்றும் அது ஏனைய மதங்களை பாதிக்காத வகையில் அமைய வேண்டும் என்றார். (ம-7,9,33)

# அம்பாறையில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(அம்பாறை)

அம்பாறை - நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாட்டுப்பளை பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் மாட்டு வண்டியுடன் மோதுண்டதில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிந்தவூர் - [illegible] சேர்ந்த 35 வயதுடைய ஜமால்டின் ஹாரூன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடும் வேகம் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த நபருடைய சடலம் நிந்தவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை [illegible] மேற்கொண்டு [illegible]மை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

# பட்டாசு உற்பத்தி 20 வீதம் குறைந்துள்ளது

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் பட்டாசு உற்பத்தி 20 சதவீதம் குறைந்துள்ளதாக அகில இலங்கை பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்கம் (AIFMA) தெரிவித்துள்ளது.

AIFMA தலைவர் தினேஸ் பெர்னாண்டோ கொழும்பு ஊடகமொன்றுக்கு தகவல் தெரிவிக்கும்போதே இதனைப் பகிர்ந்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசம்பரிலும் இதே போன்று தேவையான மூலப்பொருட்கள் கிடைக்காததால் உற்பத்தி குறைந்ததாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

இருப்பினும், இந்த ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் நாங்கள் மூலப் பொருட்களைப் பெற்றோம், எனவே நாங்கள் உற்பத்தியை நிர்வகித்தோம். ஏற்கனவே எங்கள் தயாரிப்புகளை நாடு முழுவதும் விநியோகிக்கத் தொடங்கினோம் என்றும் கூறியுள்ளார். (ம-7,9)

# களனி ஆற்றில் தவறி விழுந்தவர் மாயம்

களனி ஆற்றில் ஒருவர் தவறி விழுந்து காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்தனகலைய பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

42 வயதுடைய நபரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

களனி பிரதேசத்திற்கு புனித யாத்திரை சென்று திரும்பும் வேளையில், அத்தனகெலய பிரதேசத்தில் களனி ஆற்றுக்கு அருகில் உணவு அருந்திவிட்டு கைகளைக் கழுவச் சென்ற போதே விபத்துக்குள்ளாகியுள்ளார். அவர் நீரோட்டத்தில் அடித்துச்செல்லப்பட்டதுடன், கடற்படையினருடன் இணைந்து குறித்த நபரைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையினை பொலிஸார் ஆரம்பித்துள்ளர். (ம-7,9)

## காணாமல் ஆக்கப்பட்ட

# மகளைத் தேடி வந்த தந்தை மரணம்

(முல்லைத்தீவு)

இறுதி யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்ட மகளை தேடிவந்த தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த கணப்தி கந்தையா என்பவரே தனது மகளை இறுதிவரை காணாமல் உயிரிழந்துள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்ட திருவா கந்தையா என்ற மகளை தேடிவந்த தந்தை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உறவுகளின் போராட்டங்களிலும் பங்கேற்றிருந்தார். (ம-7,9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் காணி அற்ற பலர் இருக்க சீனாவிற்கு ஏன் 700 ஏக்கர் நிலம்?

## கிளிநொச்சி பொது அமைப்புக்கள் கேள்வி

(கிளிநொச்சி)

காணி இல்லாத 15ஆயிரம் பேருக்கு காணி வழங்க முன்வராத அரசு சீனாவுக்கு 700 ஏக்கர் காணி வழங்க முன்வருவது ஏன் என கரைச்சி பிரதேச கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாச தலைவர் கருப்பையா ஜெயக்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிளிநொச்சியில் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் சீனாவிடமிருந்து வாங்கிய கடனை மீள செலுத்த முடியாமல் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரணைமடு குளத்தின் தெற்கு புறமாக உள்ள பகுதியில் 500 ஏக்கர் வனப்பகுதியை சீனாவிற்கு விற்பதாகவும், இயக்கச்சியை அண்டிய பகுதியில் 200 ஏக்கர் காணிகளையும் சீனாவிற்கு விற்பதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சி செய்துள்ளது.

இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள இந்த முயற்சியானது வடபகுதி மக்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது.வடக்கு மாகாணத்தின் இதய பகுதியாக இருக்கின்ற இரணைமடு குளத்தின் தெற்காக உள்ள 500 ஏக்கர் காணிகளை சீனாவிற்கு கொடுத்தால் சீனர்கள் அங்கு குடியிருக்கப் போகின்றார்கள். அல்லது அவர்களது ஆய்வகங்கள் அல்லது அவர்களது செயற்பாடுகள் மிக்க கேந்திர நிலையங்களை அங்கு நிறுவப் போகின்றார்கள்.

வடக்கு மாகாணத்தில் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் காணி இல்லாமல் வாழ்கின்ற சூழல் இருக்கின்றது.

வடக்கு மகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட பகுதியில் இருக்கின்ற மக்களிற்கு காணிகளை கொடுப்பதற்கு முன்வராத அரசாங்கம், சீனாவிற்கு கொடுக்க நினைப்பதானது எமக்கு பலத்த சந்தேகங்களை எழுப்புகின்றது.

நூற்றாண்டு காலமாக மலையகத்தில் இருக்கின்ற மக்கள் லயன் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களும் இந்த நாட்டினுடைய குடிமக்களாக வாழ்கின்றார்கள். இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு மிக முக்கிய பங்களிப்பை செய்கின்றவர்கள் பிரித்தானியர்களால் வழங்கப்பட்ட லயன் வீடுகளில் வாழ்கின்றார்கள்.

ஆகவே, இந்த நாட்டினுடைய மக்களிற்கான உரிமைகள் கொடுக்கப்பட வேண்டுமாக இருந்தால், அந்த பகுதியில் இருக்கின்ற மக்களையும் சீனாவிற்கு தாரைவார்க்கும் பகுதிகளிலே அவர்களை குடியேற்ற முடியும்.

அது இந்த நாட்டிலே ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கான ஆரம்ப புள்ளியாகக்கூட அமையும் என மேலும் தெரிவித்தார். (4-100)

### பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை

# ஆளும் கட்சி உறுப்பினர்களும் இணைந்து தோற்கடிக்க வேண்டும்

## கிளிநொச்சி பிரஜைகள் குழு

(முறிகண்டி)

ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஜனநாயகத்தை மதித்து பேணிப்பாதுகாப்பதற்காக பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை பாராளுமன்றில் தோற்கடியுங்கள் என கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சியில் நேற்று பிரஜைகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் அவ்வமைப்பின் செயலாளர் சிங்கராசா ஜீவநாயகம் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலே கொண்டுவரப்படவிருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பாக பாராளுமன்றத்திலே சில நாட்களில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கையில் நீதி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அறிகின்றோம்.

இந்த சட்டம் தொடர்பாக பல்வேறுபட்ட எதிர்ப்புகள் இருக்கின்றன. அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் இருக்கின்றது. அதே வேளை, குறித்த நட்டத்தை கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் அரசாங் கமும் தீவிரமாக செயற்பட்டு வருகின்றமையை நாங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிகின் றோம்.

பாராளுமன்றத்தில் பெரும்பாண்மை பெறுவதுதான் இந்த சட்டத்தை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும். எனவே, சிறுபான்மையின பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு அப்பால் சென்று, ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சிக்கு வெளியில் சென்று இந்த கொடூரமானதும் அபாயகரமானதுமான எதிராக வாக்களிக்க வேண்டும் என்பது பொதுவாக பிரஜைகளுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

எனவே, இலங்கையில் உள்ள பிரஜைகள் என்ற ரீதியில், அரசியல் கட்சிகள், அதன் தலைவர்கள் என்ற ரீதியில் ஒட்டுமொத்தமாக இதற்கு எதிரான செயற்பாடுகள் எம்மால் முன்னெடுக்கப்பட வேண்டும்.

225 பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இருக்கின்றார்கள். அதிலும், ஆளும் கட்சிக்கு சார்பானவர்களும் இச்சட்டத்தை தோற்கடிப்பதற்கு மனப்பூர்வமான, ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக, மனித உரிமைகளை மதிக்கின்ற பேணிப் பாதுகாக்கின்ற நபர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

குறித்த சட்டத்தை தோற்கடிப்பதற்கான உதவியை பிரஜைகள் என்ற ரீதியில் அவர்களிடம் எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்தார்.(4-100)

# யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் தொடர்ச்சியாக நில ஆக்கிரமிப்பு

## சிறீதரன் எம்.பி சுட்டிக்காட்டு



(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் தெற்குப் பகுதியில் யுத்தத்துக்கு பின்னரான 2009 ஆம் ஆண்டு முதல் தொடர்சியாக நில ஆக்கிரமிப்புகள் நடைபெற்று வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சி அலுவலகமாக அறிவகத்தில் நேற்று மாவட்டத்தின் கட்சி அமைப்பாளர்கள் வேட்பாளர்கள் பிரதிநிதிகள் பொதுமக்களுடனான சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

குறித்த சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கின்ற வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதிலும் நிலங்களை சுவீகரிப்பதிலுமே இந்த அரசாங்கம் குறியாக இருந்த வருகின்றது.

குறிப்பாக பூநகரி பிரதேசத்தில் அட்டைப் பண்ணைகள் இறால் பண்ணை என்ற பெயரில் காணிகள் அபகரிக்கப்படுகின்றன.

2009 ஆம் ஆண்டு யுத்தத்திற்கு பின்னர் இரணைமடுவின் தெற்கு பகுதியை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருப்பதுடன் காடுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக அந்த பகுதியில் இருக்கின்ற காணிகளை ஆக்கிரமித்து சிங்கள குடியேற்றங்களை நிறுவுதல் அல்லது மறைமுகமாக காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (4-335)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 360 | 350 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 170 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 400 |
| தக்காளி | 200 | 150 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 180 | 140 | 120 | 200 |
| கரட் | 160 | 180 | 200 | 400 |
| பூசணி | 60 | 80 | 60 | 40 |
| புடோல் | 150 | 140 | 160 | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 170 | 120 | 120 | 130 |
| பாகற்காய் | 400 | 300 | 300 | 300 |
| வெண்டக்காய் | 250 | 280 | 180 | 250 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 200 |
| லீக்ஸ் | 350 | 280 | 300 | 400 |
| பீற்றூட் | 200 | 180 | 160 | 200 |
| கறிமிளகாய் | 200 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 700 | 800 |
| போஞ்சி | 250 | 200 | 240 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 320 | 340 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 350 | 250 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 300 | 280 | 300 |
| வெங்காயப்பூ | -- | — | — | 450 |
| முள்ளங்கி | 60 | 80 | — | 280 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 80 | — | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாயக...

ரமின் டோலூயி ஆகியோர் வொஷிங்டனில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

அனைத்து கடன் வழங்குநர்களுக்கும், நிபந்தனைகளின் அடிப்படையில் இலங்கை கடன் ஒப்பந்தத்தை எட்டுவது குறித்து இதன்போது அவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

"இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் ஜனநாயக சீர்திருத்தங்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும்" என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பரஸ்பர நலன்கள் மற்றும் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான அமெரிக்காவின் அர்ப்பணிப்பு மற்றும் சீர்திருத்தச் செயற்பாடுகள் குறித்து இருவரும் கலந்துரையாடியதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். (ம-7,9)

## தமிழர் மரபுரிமை...

தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற்றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

4.மட்டு. மயிலத்தனை மடு மேய்ச்சல் தரையில் பெரும்பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ் பண்ணையாளர்களின் மரபுரிமையான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்த வேண்டும்.

5.போருக்கு பிந்திய இன மதப் பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட பாரிய குடியேற்றம் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து மாபெரும் அடையாள உண்ணாநோன்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எம் மரபுரிமைகளை வென்றெடுக்க ஆன்மீகத் தலைவர்கள், ஆலய அறங்காவலர்கள், தமிழ் தேசிய அரசியல் கட்சிகள், சமுக மட்ட அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக சமூகம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் முன்னெடுக்கப்படும் இந்த எழுச்சிப் போராட்டத்தின் மூலம் தமிழர் மரபுரிமைகளை வென்றெடுக்க தமிழ் மக்கள் திரண்டு வந்து பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த காலங்களில் பல கால அவகாசங்கள் வழங்கப்பட்டு, ஏமாற்றப்பட்ட நிலையில் உரிய தீர்வு உடனடியாக வழங்கப்படாவிடுத்து தொடர் போராட்டங்கள் பல்வேறு பரிணாமங்களில் முன்னெடுக்கப்படும் என்பதை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் ஆழமாக வலியுறுத்தி நிற்கின்றோம் என கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ம-7,9)

## யாழில் மீண்டும்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில்மீண்டும்கொரோனா தொற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் அதனை தடுப்பதற்கான வழிமுறைகளை பின்பற்றுங்கள்.

வெளியே செல்லும்போது முகக் கவசங்களை அணிவதை கடைப்பிடியுங்கள், தனிநபர் இடைவெளியை பேணுங்கள், சவர்க்காரமிட்டு கைகளை சுத்தமாக கழுவுங்கள், அநாவசியமாக கை குலுக்குவதை தவிர்த்துக் கொள்ளுங்கள், இயன்ற அளவு கூட்டமாக ஒன்றுசேர்வதை தவிருங்கள்.

இதுபோன்ற செயற்பாடுகளில் தான் மீண்டும் ஒரு கொரோனா பேரலை ஏற்படாது தவிர்க்க முடியும். முன்பு போன்ற நிலை ஏற்படாது தவிர்க்க அனைவரும் மிகவும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்றார். (ம-7,9,104)

## குறிகாட்டு...

படுகிறது.

குறித்த பகுதி நெடுந்தீவு மக்கள், நயினாதீவு மக்கள், சுற்றுலாப்பயணிகள் ஒன்றுகூடும் துறைமுகப்பகுதியாகும்.

அனைத்து மதத்தவர்களும் பாவிக்கும் பொதுப்பகுதியில் பௌத்த மதத்தை மாத்திரம் முன்னுரிமைப்படுத்தி விளப்பரப்பலகை அமைக்கப்பட்டுள்ளமை ஏனைய மதங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக மக்கள் சந்தேகம் கொள்ளுகின்றனர்.

அத்தோடு கடற்படையினரின் ஒத்துழைப்போடு அரசமரம் ஒன்றும் ஓலையால் மறைத்து வளர்க்கப்பட்டு வந்தது, நேற்று மறைப்புக்கள் நீக்கப்பட்டுள்ளது. புத்தர் வந்தமர்ந்து குடியேறுவதற்கான முன்னேற்பாடா? என மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-7,9,33)

## வவுனியாவில்...

யில் வசிக்கும் தாயும், எட்டு மாத கர்ப்பவதியான அவரது மகளும் புத்தாண்டு தினத்தன்று நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் வவுனியா நகரில் இருந்து பூவரசங்குளம் நோக்கி சென்றுள்ளனர்.

இரவு 8.30 மணியளவில் பம்பைமடு பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் அமைந்துள்ள வவுனியா பல்கலைக்கழகத்திற்கும் பம்பைமடு இராணுவ முகாமிற்கும் இடைப்பட்ட சிறிய பற்றைக் காட்டுக்குள் இருந்து முகத்தினை துண்டுகளால் மூடி கட்டியவாறு வந்த மூவர் குறித்த மோட்டார் சைக்கிளை வழிமறித்து அவர்கள் மீது வாளால் வெட்டி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன், அவர்கள் அணிந்திருந்த சங்கிலி, காப்பு, மோதிரம் உள்ளிட்ட 6 அரைப் பவுண் நகைகளை கொள்ளையடித்துள்ளதுடன், அவர்களது பையில் இருந்த ஒன்றரை இலட்சம் ரூபாய் பணம் மற்றும் தொலைபேசிகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த பூவரசங்குளம் பகுதியைச் சேர்ந்த தாய் மற்றும் 8 மாத கர்ப்பவதி பெண் ஆகிய இருவரும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,9,250)

## புத்தாண்டு...

பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 6 மணி வரையான கடந்த 32 மணித்தியாலங்களில் விபத்திற்குள்ளான 200 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 78 பேர் நேற்று முன்தினம் விபத்திற்குள்ளாகியுள்ளதாக தேசிய வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது, பட்டாசு கொளுத்துவதால் ஏற்படும் விபத்துகள் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்துள்ளதாக தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் குமார விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குறித்த காலப்பகுதியில் தீ விபத்திற்குள்ளான ஒருவர் மாத்திரமே இதுவரை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,9)

## குரங்குகள்...

வுக்கு வழங்குவது தொடர்பில், ஆராய்வதற்காக வனவளத்துறை, நீதி பெருந்தோட்ட மற்றும் விவசாய அமைச்சுக்களை சேர்ந்த 4 அதிகாரிகள் கொண்ட குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருந்தது.

சீனாவின் அதிகாரிகள் சிலரினால் இலங்கையில் உள்ள குரங்குகளை சீனாவில் உள்ள விலங்கியல் பூங்காக்களுக்கு வழங்குமாறு விவசாய அமைச்சுக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக, இலங்கையில் உள்ள ஒரு இலட்சம் குரங்குளை சீனாவுக்கு அனுப்பும் எதிர்பார்ப்புடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக விவசாய அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், இந்த விடயம் தொடர்பாக சமூகத்தில் பாரிய கருத்தாடல் ஏற்பட்டுள்ளதுடன், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும்முறைமை தொடர்பில், அரசாங்கம் இதுவரையில் உரியவாறு தெளிவுபடுத்தவில்லை என சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இலங்கை குரங்குளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முன்னர், குரங்குகள் குறித்து முறையான கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் சூழலியலாளர்கள் வலியுறுத்துகின்றனர். (ம-7,9)

## பஞ்சாப் வெற்றி




## உருத்திர...

டத்தில் நாகபூசணி அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டமைக்கு சமயம் கடந்து ஈழத் தமிழ் உறவுகள் தமது வாழ்த்துக்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு வருகின்றனர்.


இருந்தும் குறித்த அம்மன் சிலையை அகற்றுவது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அறிய வருகின்றது. (ம)


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில்**
**5 பரப்பு 13.72 குளி காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 2 பரப்பில் 2 துண்டும் 1 பரப்பு 13.72 குளி காணி துண்டுகள் மட்டுமே உள்ளன.




**பார்வையிடும் நேரம்**
காலை 6 மணி முதல்
மாலை 6 மணிவரை

(15280)

தொடர்புகளுக்கு: ஜெயம்
**077 814 7389, 077 986 5457**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலை வாய்ப்பு

### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6366)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

### EXECUTIVE OFFICER



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6366)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியிலிருந்து 500m தூரம்
- A9 வீதியிலிருந்து 50m தூரத்தில் காணி உள்ளது.

(15279)

**076 436 5814, 077 288 0152**

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் உள்ள திருமண மண்டபம் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் உடன் தேவை.

- வரவேற்பாளர்கள் (பெண்கள்)
- முகாமையாளர்/அபிவிருத்தி முகாமையாளர்

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(15281)

**077 231 5521**

## காணிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் செல்லத்துரை வீதியில் காணிகள் விற்பனைக்கு உண்டு. 6 பரப்பும், 3 பரப்பும். வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்தது.
தரகர் தேவையில்லை.

(15259)

**074 010 6595**

## காணி விற்பனைக்கு

இராச வீதி கோப்பாய் பகுதியில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

(15238)

**077 865 8776**

## A/L ECONOMICS பொருளியல்

2024 பிரிவு மாணவர்களுக்கான தனிப்பட்ட & குழு பொருளியல் வகுப்புக்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

(15264)

தொடர்புகளுக்கு

**076 991 3255**

## மணமகள் தேவை

1978 இல் பிறந்த படித்து நல்ல பதவியிலுள்ள விவாகரத்து பெற்ற பொறுப்புகள் இல்லாத பிரான்ஸ் தமிழ் பிரஜைக்கு யாழ். இந்து கௌரவ பெற்றோர் தகுந்த படித்த கௌரவ குடும்ப பெண்ணை மணமகளாக தேடுகின்றனர்.
மணமகன் உயரம் - 5' - 10'' கேட்டை விருச்சிகம் பாவம் 38, உயரமான பெண் விரும்பத்தக்கது.
22.04.2023 வரை

தொலைபேசி இலங்கை: **077 048 8243**

வைபர் : படங்கள் அனுப்ப மட்டும்

**+33651156938**

25/04/23 இல் பின் தொலைபேசி பிரான்ஸ்

**0033 651413042, 0033652146227**

**W.app : +94765347523**

(15206)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

**IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH**

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

(15247)

**T.P : 077 780 3970, 074 007 1970**

## தேவை

வல்வெட்டித்துறையில் உள்ள வீடொன்றிற்கு பணிப் பெண் தேவை.

தொடர்புகளுக்கு

(C-6363)

**077 199 6912**

## மணமகள் தேவை

1981 இல் பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்ப கார்த்திகை நட்சத்திரம் (4 ஆம் பாதம்) உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. கல்வித் தகைமை : B.Sc, in jaffna, M.Sc London, London PR தொழில் : Business (London) விவாகரத்து பெற்றவர்.
எதிர்பார்ப்பு : A/L பூர்த்தி செய்த மணமகள்

(15264)

**077 110 7624** (T.P)
**078 303 5181** (viber, Whatsapp)

## மணமகன் தேவை

1995 இல் பிறந்த, சமயம் RC கத்தோலிக்கம், படிப்பு - A/L, அழகுக்கலை
எதிர்பார்ப்பு - வெளிநாடு மட்டும்

தொடர்புகளுக்கு

(15269)


**077 325 7837**

- உங்கள் கனவு இல்லம் ஒன்றை அமைப்பதற்கு யாழ்நகருக்கு அருகாமையில் காணி ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்.
- உங்கள் முதலீட்டை அசையாச்சொத்து ஒன்றின் மூலம் பெறுமதியானதாக்கிக் கொள்ள உடனே முந்துங்கள்.

# காணி விற்பனைக்கு உண்டு

### பலாலி வீதி, கோண்டாவில்.

- 54 பரப்பு காணி தேவைக்கேற்ப பாகங்களாக பிரித்துக்கொடுக்கப்படவுள்ளது (18அடி பாதை வசதி உண்டு)
- நல்ல குடிநீர், சிறந்த சமூகச்சூழலுடன் கூடிய செம்மண் விவசாய குடியிருப்பு நிலம்.
- திருநெல்வேலி சந்தை, மருதனார்மடம் சந்தை மற்றும் பெற்றோல் நிலையம், K.K.S Road பலாலி வீதி railway station, பிரபல திருமண மண்டபங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மிக அருகாமையில் உள்ளது.
- சொத்துக்கள் முறையாக பராமரிக்கப்பட்டு ஆவணங்கள் தெளிவாக உள்ளன.
- ஆயுள் கால உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளுங்கள்.




(15256)

NR LAND ESTATE

**077 2757484**
**077 1048865**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.